

# பூக்களின் கனவுகள்

கெகிறாவ ஸுலைஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L17596

L
894.8111
அல்கிலஹா

# பூக்களின் கனவுகள்

## - மொழிபெயர்ப்புக் கவிதைகள் -

...கப்பல் பொது நூலகம்
யாழ்ப்பாணம் சேவை

கெக்கிராவ ஸுலைஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களின் கனவுகள் (மொழிபெயர்ப்புக் கவிதைகள்)/ கெகிறாவ ஸுலைஹா/ முதற்பதிப்பு: 2020 மார்கழி/ ©கெகிறாவ ஸுலைஹா/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன்/ வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 86/ விலை: 300.00/அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Pookalin Kanavukal(Translated Poems) / Kekirawa Sulaiha/ First Edition: 2020 December/ ©Kekirawa Sulaiha/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 86 /Price: 300.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-64-1

ஜீவநதி வெளியீடு – 178



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் எண்ணெயாய்த் தன்னையூற்றி
என் ஜீவதீபத்தில் ஒளியுமிழலைச் சாசுவதமாக்கிய
எனதருமை கணவர் திரு.H.L.M. ஹனீபா அவர்களுக்கு
அன்புக் காணிக்கை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| காதலின் தோட்டம் | வில்லியம் ப்ளேக் |
| வானம்பாடிக்கான புகழாரம் | ஜோன் கீட்ஸ் |
| ஓய்வு | W.H.டேவிஸ் |
| அந்தப் பாம்பு | டி.எச்.லோரன்ஸ் |
| பதுங்குகுழிகளில் ஒரு தற்கொலை | சீக்ஃப்ரெய்ட் சசூன் |
| விருந்து | எட்னா செண்ட் வின்சண்ட் மில்லாய் |
| குவெர்னிகா | போல் எல்யூவார்ட் |
| காலையுணவு | பிரிவேத் |
| ஆறுகளைப் பேசும் கறுப்பன் | லங்ஸ்டன் ஹியூஸ் |
| என் மக்கள் | லங்ஸ்டன் ஹியூஸ் |
| கனவுகள் | லங்ஸ்டன் ஹியூஸ் |
| அந்தக் கற்சிலை | ஜேம்ஸ் றீவ்ஸ் |
| ஒரு பெரு நகரை வீழ்த்திற்று | டிலான் தோமஸ் |
| பிரிவுகள் | சில்வா கபுதிக்யான் |
| இதயத்தின் தியாகம் | வென் எக்ஸ்சின் |
| அந்த ஆலமரம் | ரவீந்திரநாத் தாகூர் |
| எவரும் அறியாத ஒரு சிறுமி | மொனிஷா அல்வி |
| தேளினது இரவு | நிசிம் எசகீல் |
| பாட்டி | சீதாகாந்த் மஹாபாத்ரா |
| உனை எப்படியும்... | அம்ரிதா பிரீதம் |
| ஒரு அறிமுகம் | கமலாதாஸ் |
| என் பாட்டியின் வீடு | கமலாதாஸ் |
| சீதை, நீ பேசு | பினா அகர்வால் |
| வயோதிபம் தழுவுகையில் | பினா அகர்வால் |
| மனுஷ உன்னதங்கள் | டாக்டர்.ராம் ஷர்மா |
| ஈட்டியும் வில்லும்.. | மார்ஷல் ஹெம்ப்ராம் |
| பசுவின் பாடல் | சித்திலிங்கையா |
| என் மக்கள் | சித்திலிங்கையா |
| கூடு | உமா கவாய் |
| அந்தத் தட்டுகை | குல்சார் |
| கண்கள் | குல்சார் |
| நீதி | பிஸ்னு என்.மொஹப்பத்ரா |
| என் அம்மாவும் என் கவிதையும் | சுர்ஜித் பதார் |
| ஒருநாள்... | லீலாதார் மண்ட்லோய் |
| பூக்களின் கனவுகள் | புஷ்பா ஆர். ஆச்ர்யா |
| ஒரு கவிதை | லுத்பா சலிமாபேகம் |
| அந்தக் கற்கோயில்கள் | H.K.கவுல் |
| தினமும் காலையில் | சுமன் போக்ரால் |
| அறைகளிலிருந்து வாசற்புறங்களுக்கு | தரன்னும் ரியாஸ் |
| ஒரு பழைய புகைப்படம் | சுதா ராய் |
| அடியாழத்தே.. | பிஸ்மா |
| நிழலும் சுயநலமும் | சந்ராபிர் |
| ஆங்கொரு பசுமரம் இருந்தது | மம்தா கிரான் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

“கவிதை மொழிபெயர்க்க முடியாதது, படைப்பாக்க ரீதியான ஒரு உருமாற்றம் மட்டுமே சாத்தியம்” என்ற ஒரு கூற்று உண்டு. இவ்வாறு சொன்னவர் றோமன் யாகோப்ஸன் என்ற புகழ்பெற்ற மொழியியல் அறிஞர். இது பெருமளவு உண்மையாக இருக்கலாம்.

எனினும், பண்டைக்காலத்திலிருந்தே மொழிபெயர்ப்பு முயற்சிகள் நடைபெற்றே வருகின்றன. சரியாகவோ, தவறாகவோ உலகின் மிகப் பெரும் பாலான கவிஞர்களை நாம் மொழிபெயர்ப்பு மூலமாகவே அறிகிறோம். உலகக் கவிதைகளை அவற்றின் மூல மொழிகளிலேயே படித்துச் சுவைக்க வேண்டுமானால் நமக்குள்ள ஒரே வழி உலக மொழிகள் அனைத்தையும் அறிந்திருப்பதுதான். அது யாருக்கும் சாத்தியமில்லை. ஆகவே மொழி பெயர்ப்பாளர்களில் தங்கி இருப்பதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை. கவிதை மொழிபெயர்ப்பில் உள்ள சிக்கல்களைப் புரிந்து கொண்டு மூல மொழியில் உள்ள கவிதைக்குச் சமமான அல்லது அதற்குக் கிட்டிய ஒரு பிரதியை இலக்கு மொழியில் அதன் மொழிமரபுகளுக்கு இயைபான முறை யில் உருவாக்கித் தருபவரை ஒரு நல்ல மொழிபெயர்ப்பாளர் என நாம் கருதலாம்.

மொழிபெயர்ப்பும் மறுபடைப்பே என்ற வகையில் ஒரு படைப் பிலக்கியத்தை மொழிபெயர்ப்பவர் ஒரு படைப்பாளியாக அல்லது படைப்புணர்வு உள்ள ஒருவராக இருக்க வேண்டியது அவசியம். கெகிறாவ ஸுலைஹா அத்தகைய ஒருவர். அவர் ஒரு ஆங்கில ஆசிரியர். தற்போது ஒரு பாடசாலை அதிபராகப் பணியாற்றுகிறார். கவிஞராக சிறுகதை, கவிதை, கட்டுரை மொழிபெயர்ப்பாளராக அவர் இயங்கி வருகிறார். அவரது முதல் மொழிபெயர்ப்புக் கவிதை நூல் ‘பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும்..’ 2009ம் ஆண்டு சிறந்த கவிதை மொழிபெயர்ப்புக்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. ‘இந்த நிலம் எனது’ என்ற தலைப்பில் அவரது மொழிபெயர்ப்பு கவிதைத் தொகுதி ஒன்றும் ஏற்கனவே வெளி வந்துள்ளது. மொழிபெயர்ப்பிலேயே அவர் அதிக அக்கறை காட்டுகிறார் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறேன். 'அந்தப் புதுச்சந்திரிகையின் இரவு' என்ற மொழிபெயர்ப்புக் கட்டுரைத்தொகுதி ஒன்றும் வெளியிட்டுள்ளார். 'வானம்பாடியும் ரோஜாவும்' அவரது சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறுகதைகள் மொழி பெயர்ப்பு நூலாகும். போலவே அவரது 'ஞாபகிக்கத் தக்கதோர் புன்னகை' மொழியாக்கக் கட்டுரை நூலாகும்.

இப்போது வெளிவருகின்ற இந்த 'பூக்களின் கனவுகள்' அவரது மூன்றாவது மொழிபெயர்ப்புக் கவிதைத்தொகுதியாகும். சுமார் 43 கவிதை களை உள்ளடக்கியுள்ளது. இத்தொகுப்பு உலக அளவில் நன்கு அறியப்பட்ட ரவீந்திரநாத் தாகூர், வில்லியம் பிளேக், டி.எச். லோரன்ஸ், டைலான் தோமஸ், லங்ஸ்ரன் ஹியுஸ், அம்ரிதா பிரீதம் முதலியோரின் கவிதைகளுடன் தற்கால இந்திய, சீன, நேபாளக் கவிஞர்கள் பலரின் கவிதைகளும் இத்தொகுப்பில் உள்ளன. பல்வேறு நிலைப்பாடுகள் கொண்ட கவிஞர் களின் வெவ்வேறு வகையான கவிதைகளின் கதம்பமாக இத்தொகுப்பு அமைந்திருக்கிறது. அவ்வகையில் கவிதைச் சுவைஞர்களுக்கு இத்தொகுப்பு ஒரு விருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கலாம். சில கவிதைகள் ஆங்கிலத்திலிருந்து நேரடியாகத் தமிழாக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பிற மொழிக்கவிதைகள் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழாக்கப் பட்டுள்ளன. கவிதை மொழிபெயர்ப்பு மிகச் சிரமமான முயற்சி என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு ஸுலைஹா அதில் பெருமளவு வெற்றி கண்டுள்ளார் என்றே கூற வேண்டும். பெரும்பாலான இடங்களில் அவரது மொழி பெயர்ப்பு ஆற்றல் மிளிர்கிறது. சில இடங்களில் நெருடல்கள் உண்டு.

ஒரு மொழிபெயர்ப்பை நல்ல மொழிபெயர்ப்பு அல்லது மோசமான மொழிபெயர்ப்பு என்ற வகையில் நாம் வகைப்படுத்தலாம். ஆனால், முழு நிறைவான மொழிபெயர்ப்பு என்று எதுவுமே இல்லை. ஒரு மொழி பெயர்ப்பு எப்போதுமே செப்பனிடலை, மெருகுபடுத்தலை வேண்டி நிற்கிறது. அதற்கு முடிவே இருப்பதில்லை. ஒரு மொழி பெயர்ப்பாளர் தன் மொழிபெயர்ப்பில் திருப்தியில்லாத மனநிலையுடன் தன் மொழி பெயர்ப்பை மீண்டும் மீண்டும் செப்பனிடுவதன் மூலமே திருப்தியான மொழிபெயர்ப்பை நமக்குத் தர முடியும். கெகிறாவ ஸுலைஹா இவ்வகை யில் திருப்தியுறாத மனநிலை உடையவர் என நான் நம்புகிறேன். அதனாலேயே நம்மைப் பெருமளவு திருப்திப்படுத்தும் ஒரு மொழி பெயர்ப்பை நமக்குத் தந்துள்ளார். அவரது முயற்சியும், கடும் உழைப்பும் நம் பாராட்டுக்குரியது. தமிழ் இலக்கிய உலகு இதனை வரவேற்கும் என்று நம்புகிறேன்.

**பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17546

# முன்னுரை

பூக்கள் சுமக்கும் கனவுகள் போலவே, உள்ளம் சுமக்கும் மென்கனவுகள் ஏராளமாயுள்ளன. ஆதலால், மறுபடியும் ஒரு மொழிபெயர்ப்புக்கவிதைத் தொகுப்போடு உங்களிடம் நான் வந்து நிற்கிறேன். 'பூக்களின் கனவுகள்' நெஞ்சுக்குள் நெடுநாளாய் சுழன்ற கவிதைகளின் தொகுப்புத் தான். அக்கா கெக்கிறாவ ஸஹானா இருந்த போதே பேராசிரியர் உயர்திரு. எம்.ஏ.நுஹ்மான் அவர்களிடம் பேசி, அணிந்துரை பெற்றிருந்த நூலும் தான். சுமார் நான்கு வருஷங்கள் கடந்தோடியபின் சின்னச்சின்ன மாற்றங்களோடு இப்போதுதான் வெளி வருகிறது. அப்படித்தான் இறைவன் நாடியிருக்கிறான் போலும்.

எப்போதும்போலவே, இந்த தொகுப்பில் இருக்கும் ஏறக்குறைய நாற்பத்து மூன்று கவிதைகளையும் ஏன் தொகுப்பாக ஒன்று சேர்க்க நினைத்தேன் என்பதற்கு என்னிடம் சொல்லும்படியான காரணங்கள் ஒன்றும் கிடையாது. எந்த மொழியில் எவர் எதைப் பேசினாலும் பாடினாலும், அன்பின் கையில் அடைக்கலமாதல் என்ற இறுதிக்கனவின் நிமித்தம் மட்டுமே ஒவ்வொரு மனிதனும் பயணிக்கிறானா? ஆமாம், எனக்கென்னவோ அப்படித்தான் தோன்றுகிறது. நம்மை அங்கீகரிக்கும், கையேந்தும் தேசத்தலைவனை, நம்மை அரவணைக்கின்ற அன்பாளரை தேடி அலைவது ஒரு மொழியைச் சார்ந்து நிற்கும் ஒரு குறித்த சமூகத்திற்கு மட்டுமே உரித்தான பிரச்சினை என்றில்லை.

சொற்களுக்குள் மிகைத்து ஜீவிக்கும் உயிர்ப்பை வாசிப்பின் நகருதல் பயணத்திலே கண்டடைந்து, எப்போதும் என்னைப் பாதித்த, வலி மிகுதியாய்த் தந்த கருக்களுக்குள் அவற்றின் பொருள் சிதையாத கவனத்தையும் முடியுமானவரை செலுத்தி, என் மொழிக்குள் கொண்டு வரும் முயற்சியில் இறங்குகையில் ஒரு பெரும் மனத்திருப்தியை நான் அடைகிறேன்; அனுபவிக்கிறேன். ஒரு வகையில் மொழிபெயர்ப்பு என்பது நன்மையையும், நீதியையும் இறுதி இலக்காய்க் கொண்ட அறப்போர் என்றாகிறது எனக்கு. மதத்தின் பேரால் நிகழும் அடக்குமுறை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின்மையின் துயரங்கள், யுத்தத்தினால் வறண்டு கிடக்கும் மானுடவெளி, பெண்ணாய்ப் பெண் புரிந்து கொள்ளப்படாமை, நேயம் கலந்த காதலின் தேவை, பிணிகளின் அவலங்கள், புறக்கணிப்பு சாதிக் கொடுமைகள், முதுமையின் கண்ணீர் இன்னபிறவென்று என்னை அழவைத்த கவிதைகளின் கலவையை இத்தொகுப்பு கொண்டிருக்கிறது என நான் காண்கிறேன். அகவன்முறையை நமக்குள் இருந்து அகற்றி, சக மானுடன் குறித்த கௌரவத்தைத் தர நாம் தயாராகி விட்டாலே சமூகத்தில் உள்ள வடுக்களை நீக்கிவிடமுடியும் என்ற வகையில் மொழி கடந்து இலக்கியத்தின் பணி மிக முக்கியமானது.

எப்போதும்போல என்னில் அன்பும் கவனிப்பும் செலுத்தி இதை நூலாக்கித் தருவதில் முன்னின்ற 'ஜீவநதி' பரணீதரனை ஒரு அம்மாவாய் நெஞ்சில் தாங்குகிறேன்.

கெக்கிறாவ ஸுலைஹா,
செக்குப்பிட்டி,
கெக்கிறாவ.
2020.11.14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லியம் ப்ளேக்
William Blake

## காதலின் தோட்டம்
## The Garden of Love

காதலின் தோட்டத்துக்கு நான் விஜயம் செய்தேன்.
என்றும் கண்டிராதவற்றையெலாம் கண்ணுற்றேன்;
பச்சைப் புல்வெளியில்
நான் முன்னம் விளையாடித் திரிந்த
அவ்விடத்தே நட்ட நடுவிடத்து
ஒரு வழிபாட்டுத்தளமது கட்டப்பட்டிருந்தது.

அவ்வழிபாட்டுத் தளத்தினது நுழைவாயில்களவை
மூடப்பட்டிருந்தன,
'நீ உள் நுழைய முடியாது' எனும் வாசகம்தனை வரைந்து வைத்து.
ஆதலினால் பற்பல இனிய புஷ்பங்கள் தமைச் சுமந்திருந்த
காதலின் தோட்டம் நோக்கி நான் நடந்திட்டேன்.

அதுவோ கல்லறைகளினால் நிரம்பியிருக்கக் கண்ணுற்றேன்.
புஷ்பங்கள் இருக்கவேண்டிய இடத்தெலாம்
புதைகுழிகளவை காட்சி தந்தன.
போதனை புரிவோரோ கன்னங்கறு நிறத்தே ஆடையணிந்து
வலம் வந்தனர்,
என் குதூகலங்களையும், விருப்பங்களையும்
முட்கள் கொண்டு கட்டி வைத்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோன் கீட்ஸ்
John Keats

## வானம்பாடிக்கான புகழாரம்
## Ode to a Nightingale

நினைவுகளை மெல்லச் சாகடித்து நிலத்தடி நீரோடைக்குள்
எனை அழுத்தி மூழ்கடிக்குமாப்போல
மரணத்தை ஞாபகிக்கும் விஷம் மிகு மருந்துண்டவனாய்
மயக்கமும் சோர்வும் என் உணர்வுகளை மெல்ல வந்து வாட்ட
என் இதயமோ வலி மிகைத்துக் கிடக்கிறது.
பச்சைவனத்துக் கடவுளின் பட்சி நீ
மெல்லச் சிறகசைத்துப் பறக்கும் ஓ! வானம்பாடியே,
எண்ணிலடங்கா நிழலிலிருந்தும், பசுமரங்களின் உச்சியிலிருந்தும்
முதுவேனிற் காலத்தின் வரவேற்பாய் தேன் சொட்ட நீ பாடும்
உன் திவ்யப்பாடலின் இராகக் கொஞ்சலில்
எனக்கேதும் பொறாமை கிடையாது,
உன் குதூகலங்களுள் என்னைத் தொலைப்பதல்லாமல்.

வனத்தின் செறிவு நிறை தேன்கனிகள் பிழிந்தெடுத்து,
ஆழ் நிலத்துள் புதைத்து வைத்திட்ட
குளிர்மை செறிந்த உயர்ரக மது கொண்ட கிண்ணமும்
தேவப்பெண்டிரின் ஊற்று நீரதுவும் ஓ! எனக்கு வேண்டும்.
சின்னச்சின்ன நயனங்களென குமிழிகள் ஜொலிக்கும் அந்த
மந்திரத் திரவத்தின் பருகுதலில் என் இதழ்கள் செந்நிறத்திற் திரள,
நாட்டுப்புறத்தின் பாரம்பரியப் பாடலை
கொண்டாட்டங்கள் மிகைத்த மகிழ்ச்சியில் திளைத்து இசைத்தபடி,
எவர்க்கும் தெரியாத கருவனத்துள்
ஆரவாரமாய் உன்னோடு எனைத் தொலைத்து
நான் நடனமாட வேண்டும்.
இலைதழைகளிடையே நீ கொண்டாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருமறியா அழகிய உன்னுலகில்
ரகசியமாய் நான் வந்து
விட்டுவிடுதலையாதல் வேண்டும்,
உடல்நலம் கூனிப் பக்கவாதமும்,
சாம்பல் நிறத் தலைமயிரோ, வழுக்கையோ
இளமைத்தாவி முதுமையைத் தொட
உடல் மெலிந்து மரணம் தழுவ,
துயரத்தின் முனகலையும், முறைப்பாட்டையும்
ஒருவருக்கொருவர் முன்வைக்கும் மானுடவெளியின்
களைப்பும், துயரும், பிணியும் நீங்கி,
காமம் மிகைத்த கண்களை
எப்போதும் தன்னிடத்து வைத்திருக்கும்
திராணியற்ற அழகு
ஒருவர் மீது கொண்ட மையல் சலிக்க
இன்னொருவரிடத்து தன் காதலை மாற்றி
நாளை தோல்வியைத் தழுவிக்கொள்ளும் ஆதலால்
தொலைவில் எவருமறியாதபடி மறைந்து சிதிலமாகி
உன்னில் நான் கலக்க வேண்டும்.

சோர்வுற்றுத் திணறும்
சிந்தனையுணர்வின் தலையீடுகள் தவிர்த்து
அனைத்தையும் அப்பால் தள்ளி வைத்து விட்டு
என் கவிதையின்
கண்ணுக்குப் புலப்படா சிறகுகள் ஏந்தி
நான் உன்னோடு பறக்க வேண்டும்.
ஏலவே உன்னோடு சங்கமித்திருக்கிறேன் நான்.
போதை தேவன் கொணர்ந்த கிறக்கமோ, மருந்தோ
இனி ஒன்றும் எனக்குத் தேவையற்றவை.
இரவு மென்மையானது.
நிலவரசி அவள் சிம்மாசனத்தில்
நட்சத்திரத்தோழியர் புடைசூழ
அமர்ந்திருக்கிறாள் ஆயினும்,
பாதையெங்கிலும் பாசிபடர்ந்து
மரங்களின் அடிவேர் வரை

பொது நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கடித்துக் கிடக்க,
மரக்கிளைகளை மென்தென்றல் இடையறுத்து
அவ்வப்போது கொண்டுவரும் வெளிச்சம் தவிர
சுவர்க்கத்து ஒளிக்கீற்று தரையை வந்தடையாதபடி
பெருகிப் பரவியிருக்கிறது
நீ வாழும் இப்பெருங்காட்டில்.

என் பாதத்தடியில் கொட்டிக்கிடக்கும்
பூக்கள் எவையென்றோ,
அந்த மரக்கிளைகள்
என்ன வாசனை அள்ளி வருகிறதென்றோ
புரிந்துகொள்ள முடியாதளவு இருள்
தன் போர்வையை எங்கிலும் அள்ளி வீசியிருக்கிறது.
இறப்பை ஞாபகிக்கச் செய்யுமாப்போல
சடுதியில் உதிரும் வைகாசி ஊதாப்பூவும்,
புல்லும், நெருஞ்சியின் முள்ளும்,
காட்டு மரக்கனிகளும்,
காட்டுத் தீவின் வித்தியாசமான ரோஜாவும்
வசந்தகாலத்தின் முடிவினில் நிகழும்
முதுவேனிலின் வருகையும்
அவை இரண்டினதும் கலவையும்
அதனோடு இணைந்து வரும்
ஈக்களின் ரீங்காரமுமே
இவ்வாசம்தனை அள்ளி வருவதாய்
நான் அனுமானிக்கிறேன்.

இருளின் சப்திப்பை என்னால்
செவிமடுத்திட முடிகிறது.
இருட்டும், தனிமையுமாய் நீளும் என் வெளியில்,
நிம்மதி தருவதாய் நானுணரும் இறப்பை
பாதி நேசிக்கிறேன் ஆதலால்,
இசை கூட்டித்தரும்
அதன் சம அர்த்தச் சொற்களோடு சேர்த்து
நான் மரணத்தைக் கூவி அழைக்கிறேன்,
என் கவிதைகளோடு தொலைவெளியில் உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவை கலந்து ஊற்றி நீ பாடும்
வர்ணிக்கவியலா உன் அழகுப்பாடலோடு சேர்த்தெடுத்து,
காற்று என் மூச்சை
நடுநிசியில் மென்மையாய் பற்றிப் பிடிக்குமாறு
வேண்டுதல் செய்தபடி.
இன்னும் நீ பாடிக் கொண்டிருக்கிறாய்,
வீணில் அதை நான் கேட்கிறேன்
சாவு எனை அண்டும் பொழுதிலும்,
இறந்த ஆன்மாவுக்கான துதிப்பாடலென
என் புதைகுழியின் தரைமீதில் புல் போர்வையாய்
நின் பாடலது விரிகிறது.

இறப்பதற்காய்ப் பிறக்கவில்லை நித்தியப்பறவை நீ.
பசி கொண்டு பொறாமையிற் திளைத்த
எவ்வம்சத்தவரும் உனை வீழ்த்தல் முடியாது.
கடக்கும் இவ்விரவில் நான் கேட்கும் உன் பாடல்
பேரரசர், பெரும் கோமகன்கள், பிணியாளர், துயராலலைந்தோர்,
சோளக்காடு நடுவினில் ஏங்கி நின்ற அரசிளங்குமரிகள்
காலத்தின் நெடுகிலும் கேட்டு வந்த பாடலேயாம்.
தனித்த தேவநிலத்தே நுரைத்த அபாயமிகு கடலின்
மந்திர மாளிகையை வசியம் செய்து வைத்த நின் புதிர்ப்பாடலேயாம்.

தனிமை எனும் அந்தச் சொல் சடுதியாய் ஒலித்து
சாவுமணியென உன்னிடமிருந்து என்னைப் பறித்துப் பிரிக்கிறது.
போய் வா என் வண்ணப்பறவையே,
நாட்டுப்புறக் கதைகளில் வரும் ஏமாற்றும்பிராணியென
உன் துயர கீதம் சதுப்புத்தரையின் மருங்குகளிலும்,
அமைதியாய் ஓடும் நீரோடைகளின் மீதிலும்,
மேலே மலையுச்சிப் புறத்திலும்
அடுத்திருக்கும் பள்ளத்தாக்குகளிலும் மங்கிச் சோர்கிறது
ஆதலினால், போய் வா பட்சியே, போய் வா.
அது என்ன காட்சியா? எழுந்து நடக்கும் கனவா?
உன் இசை போகட்டும் திராணியற்ற என்னிடமிருந்து
நான் விழிப்பாயிருக்கிறேனா,
அன்றி உறக்கத்திற் திளைக்கிறேனா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

W.H.டேவிஸ்
W.H.Davies

## ஓய்வு

## Leisure

என்ன இந்த வாழ்வினது ஓட்டம்
எதிலும் நின்று லயித்து ரசிக்க முடியாதபடி?
பசுக்களும் மந்தைகளும் மேய்ந்து திரியும் அழகை
மரத்தடியில் நின்று ரசித்திருக்க நேரமில்லை எமக்கு.
தோப்புகளைத் தாண்டிச் செல்கையில்
புல்வெளிகளுக்குள் தமதான உணவுப் பண்டங்களை
ஒழித்து வைக்கின்ற அணில்பிள்ளையை
அவதானித்திடக்கூட அவகாசங்களில்லை.
இராக்களில் விண்மீன்கள் நிறை விசும்பினைப் போல
பரந்தகன்ற பகற்பொழுதில்
நீரோடைகளை நின்றவதானிக்கக் கொடுப்பினையில்லை.
அழகின் பக்கம் முகம் திருப்ப
அவளது நர்த்தனத்தின்போதில் அந்தப் பாதங்களின்
அழகெங்ஙனம் என்று காண நேரமேயில்லை நமக்கு.
அவளது விழிகளில் தொடங்கிய புன்னகை
இதழ்களுக்குத் தாவி மலர்த்தும்வரை காத்திருக்க நேரமில்லை.
என்ன பரிதாப வாழ்க்கை
எதிலும் நின்று லயித்து ரசிக்க முடியாதபடி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டி.எச். லோரன்ஸ்
D.H. Lawrance

## அந்தப் பாம்பு

The Snake

பொத்துவில் பொது நூலகம்
பிரதேசசபை

என் தண்ணீர்த் தொட்டிக்கு வந்திருந்தது
நீரருந்திப் போகவென்று ஒரு பாம்பு.
வெப்பம் தகிக்கும் ஒரு நாளாதலால்
சூட்டைத் தாங்கிடும் வண்ணம் நானிருந்தேன்
என் பிஜாமா ஆடையில்.

வித்தியாசமான மணம் கமழும்
அந்தப் பெரு விருட்ஷத்தின் இருள்சூழ் நிழலில்
என் பாத்திரம் ஏந்தி நான் வந்தேன் படியிறங்கி.
ஆயினும் நான் காத்திருக்க வேண்டும்,
நின்று நான் காத்திருக்கத்தான் வேண்டும்.
ஏனெனில், எனக்கு முன்னம் தொட்டியருகில் இருந்தது அது.

இருள் போதொன்றில்
பூமிச்சுவரின் வெடிப்பொன்றிலிருந்து
வந்திருக்கிறது அந்தப்பாம்பு.
மஞ்சளும், கபிலமும் கலந்த தன் தளர் வயிற்றுப்புறத்தை
பின்னே இழுத்து இழுத்து முன்னேறி
தண்ணீர்த் தொட்டிக்கு
வந்து சேர்ந்திருக்க வேண்டும் அது.
தன் தொண்டைப்பகுதியை கற்றரை மீதில் மெல்ல வைத்தே
குழாயிலிருந்து தண்ணீர் சொட்டுச் சொட்டாய் வழியுமிடத்தே
தன்னை நிலைநிறுத்தி நக்கி உறிஞ்சிற்று தன் கூர்வாயால்.
மெதுவாய் குடிக்கிற நீர் தொண்டைக்கூடாய்
மெல்ல மெல்ல உள்ளிறங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தண்ணீர்த்தொட்டியருகே யாரோ எனக்கு முன்னம்.
நான் காத்திருந்தேன் இரண்டாம் வருகையாளனைப்போல
அருந்திய பின் தன் தலை உயர்த்திற்று
மந்தைகள் செய்வதே போன்று.
தெளிவற்று நோக்கிற்று என்னை
மந்தைகள் ஏதாகிலும் அருந்துகையில் செய்வதே போன்று.
உதட்டோடு தன் இருகூர் நாக்கை நக்கியபடி
சிந்தித்தது ஒரு கணம்.
மறுபடி குனிந்து இன்னும் கொஞ்சம் அருந்திற்று அது.
'சிசிலி' யின் ஜூலை
'எட்னா' எரிமலையின் குழம்பெனத் தகித்திடும் நாளில்
கபில நிறத்துப்பூமியில் எரியும் நெருப்பின்
மஞ்சள் நிறத்துச் சுவாலையாய் அது.

என் கல்வியின் குரல் சொல்லிற்று எனக்கு
அது கொல்லப்படல் வேண்டுமென.
ஏனெனில் 'சிசிலி' யில் கபில நிறப் பாம்புகள் சாதாரணம்தான்.
பொன் நிறத்தினதோ கடும் விஷமுடையன.
எனக்குள் ஒலிக்கும் குரல்கள் மேலும் சொல்லின.
நீ ஒரு மனிதனாயின் தடியெடுத்துப்
பிளந்து கொல்ல வேண்டும் அதை இப்போதே.
எனக்குள் நான் ஒப்புக் கொண்டேன்
எந்தளவு அதனை நான் உள்மனசுள் நேசிக்கிறேன் என்று.
என் தண்ணீர்தொட்டிக்கு நீரருந்த ஒரு விருந்தினனேபோலும்
விஜயம் செய்திருக்கும் அப்பாம்பினால்
எனக்குள் பொங்கிய மகிழ்ச்சி பற்றி என்ன சொல்ல?
சமாதானமாய் பிரிந்து நன்றியேதும் சொல்லாமல்
பூமியின் கொதிக்கும் வயிற்றினுள் மறுபடி செல்கிறதே அது.

அதனைக் கொன்றிடத் தேவையில்லை என உறுதி பூண்டது
எந்தன் கோழைத்தனமோ?
அதனோடு பேசி உறவாட அவாவுற்றமை என் தப்போ?
அதனை கம்பீரமாய் உணர்கிறேனே என் தன்னடக்கமோ?
என்னுள் மிகைத்துக் கிடக்கிறது மரியாதையுணர்ச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடி அதே குரல்கள் என்னுள் ஒலித்தன இங்ஙனம்: -
அச்சம் ஏதும் இல்லையெனில் அதனைக் கொல்வாய் நீ!

உண்மையாகவே நான் அஞ்சினேன்; அஞ்சித்தானிருந்தேன்.
இரகசியப்பூமியினது இருட்கதவு திறந்து
என் விருந்தோம்பல் நாடி வந்திருக்கிறது ஆதலினால்
அச்சத்தையும் விட மிகைத்துக் கிடந்தது அதன் மீதான மரியாதை.
போதுமானவரை பருகிற்று அது.
தூக்கியது தலையை கனவில் மிதக்கிறமாதிரி
போதையில் இருக்கும் ஒருவனே போலும்.
தன் நாவு நக்கிற்று காற்று தவழும் இரவைப்போல
கன்னங்கறுப்பாய்.
நக்குகையில் சுற்றுமுற்றும் பார்த்தது ஒரு கடவுளே போலும்.
காற்றுள் தன் தலையைத் திருப்பி மெல்ல மிக மெல்ல
ஒருகனவில் மிதப்பதேபோலும்
சுவர்முகத்து உடைந்த ஓரம் வழியே மீண்டும் ஏறி
மெல்ல தன் நீள்தேகம் சுருட்டி வளைத்து உள்ளே போனது.

திகில் நிறை பொந்துள் தன் தலையை உள் நுழைக்கையில்
தன் புஜங்கள் மடக்கிச் சுருக்கிற்று.
அதன் பயங்கரப் பொந்துள் அதுவே பின்வாங்குகிறாற்போல
ஒரு வகை அச்சம், பீதி, ஒருவித எதிர்ப்பு.
எனினும் திட்டமிட்டபடியே போகிறது அது.
மெல்ல நுழைகிறது அது.

என் பாத்திரம்தனை மெல்ல கீழே வைத்து
சுற்றுமுற்றும் பார்த்து ஒரு சின்னத் தடியெடுத்து
சலசலப்போடு என் தண்ணீர்த்தொட்டி நோக்கி எறிந்தேன்.

தடி ஒன்றும் அதைத் தாக்கியிருக்காதுதான்
நான் அப்படித்தான் எண்ணுகிறேன்.
ஆனாலும் வெளித் தெரியும் தன் உடற்பகுதியை
மெல்ல உள்ளெடுத்து ஒரு மின்னலைப்போல
துடிதுடித்துப்போயிற்று அது.

17596



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்பொந்தின் பிளந்த பூமிக்கூடே முன் சுவற்று வழியாய்.
நடுப்பகல் மிகக்கடுமையான வெயில் சுட்டெரிக்கிறது.
வியப்பு மாறாமல் பார்வை பதித்துக் கிடந்தேன் நான் அதன் மீதில்.
உடனடியாய் உளம் வருந்தினேன்
என்ன அற்பச் செயல்,
என்ன வன்மம்,
என்ன கீழ்த்தரச்செயல்
எனது எண்ணியெண்ணி எனையே இகழ்ந்தேன் நான்.
கூடவே என் சபிக்கப்பட்ட மனிதக் கல்வியின்
உள்மனசுள் ஒலித்த எல்லாக் குரல்களையும்.
அந்த 'அல்பட்ரஸை' எண்ணினேன் நான்.
அது மீள வரமாட்டாதா நான் ஏங்கினேன் என் பாம்பே,

அஃது எனக்கு அரசன் போலும்.
கீழ் உலகில் முடிசூட்டப்படாமல் நாடு கடத்தப்பட்ட
ஒரு அரசனைப்போலும் அவனை
மறுபடி அரசனாக்கிப் பார்க்கும் ஆவலில் தவித்தேன் நான்.

ஆதலினால் நான் என் வாழ்வின்
உன்னதமான பிரபுக்களில் ஒருவரோடு
அளவளாவும் அற்புத வாய்ப்பை இழந்தவன் என்றானேன்.
என்ன பரிதாபம், நான் ஏதேனும் பிராயச்சித்தங்கள்
செய்தாக வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீக்ஃப்ரெய்ட் சசூன்
Siegfried Sassoon

## பதுங்குகுழிகளில் ஒரு தற்கொலை
Suicide in the Trenches

நான் அறிந்திருந்தேன்,
பக்குவத்தில் குறைந்த, வாழ்க்கையின்
வெற்றுப் பரவசங்கள் கண்டு பல்லிளிக்கின்ற,
அமைதி நிறைந்த இருளில்
தனியே நிம்மதியாய்த் துயிலுறங்கி,
காலைப்பறவையின் பள்ளியெழுச்சியோடு
படுக்கை விட்டெழும்பும்
ஆடம்பரமில்லா அந்த எளிய படைவீரச்சிறுவனை.

சோர்விலாழ்த்தும், மந்தைகள் மேயும், பேன் பூச்சிகள் ஊரும்
போதைக்கும் போதாமை நிலவும் குண்டுகள் குவிந்திருந்த
அந்த குளிர்காலப் பதுங்குகுழிகளில்
மெல்லத் தன் துவக்கையெடுத்து குண்டு ஒன்றை இட்டு
தன் தலையில் வைத்து சுட்டுக்கொள்கிறான் அவனே தன்னை.
அப்புறமெல்லாம் அவன் பற்றிப் பேசுவார் யாருமில்லை.

போருக்குப்போகும் அந்த இளம் படைவீரர்களின்
மாட்சிமை நடைப்பயிற்சி கண்டு
சுடர்விடும் கண்களில் பேரார்வத் தீயேந்தி வழியனுப்பி,
இன்று ஓசைபடாமல் அவன் இல்லம் சென்று
இறுதிப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும்
தேசப்பற்று முகம் தரித்த சனக்கூட்டத்தினர்
உங்களுக்கு என்ன தெரியும் ஐயோ நரகமே,
அவன் தன் இளமையும், சிரிப்பும்
எங்கே போயிற்று என்பது பற்றியெல்லாம்...?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்னா செண்ட். வின்சன்ட் மில்லாய்
Edna St.Vincent Millay

## விருந்து
## Feast

ஒவ்வொரு திராட்சைக் கொடியிலிருந்தும்
நான் பருகினேன்.
இறுதியானது முதலாவதைப் போலவேயிருந்தது.
தாகத்தைப்போல மிக அற்புதமான திராட்சை ரசம்
எனக்கெங்கும் கிட்டவில்லை.

ஒவ்வொரு வேரையும்
நான் மெல்லக் கடித்தேன்.
ஒவ்வொரு தாவரத்திலிருந்தும்
நான் கொஞ்சம் உண்டேன்.
தேவையைப்போலும் இனிதான
கனி எங்கும் கிட்டவில்லை எனக்கு.

திராட்சை வியாபாரிக்கும், வரும் வணிகனுக்கும்
திராட்சையையும் தானியத்தையும்
அள்ளிக் கொடுத்து உணவூட்டு.
இளைத்துக் களைத்து நான் கிடப்பேன்,
என் தாகத்தோடும் பசியோடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் எல்யூவார்ட்
Paul Eluard- Eugene Grindel

## குவெர்னிகா
## Guernica

குவெர்னிகா!
போஸ்க் தேசத்தின் பாரம்பரியத் தலைநகராம்
பிஸ்கேவ் பகுதியில் சிறுநகர்.
போஸ்க்கின் சுதந்திரத்தினதும்
பாரம்பரியத்தினதும் புனித அடையாளச் சின்னமாயிருப்பது
கருங்காலி (சிந்தூர) 'ஒக்' மரமாம்.
சுதந்திரமான மென்னுணர்வுகள்
குவெர்னிகாவின் பூர்வீகம் என்றிருக்க
ஏப்ரில் இருபத்தாறு
ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தேழில்
மூன்றரை மணித்தியாலங்களாக
நாசிகளது கூட்டு விமானப்படைகள்
தொடர்ச்சியாய் பொழிந்தன குண்டுமழையை.

பூமியின் அடிவரை தீய்ந்து வெந்தது.
இறந்து போயினர் இரண்டாயிரம் பேர்.
அனைவரும் சாதாரண குடிமக்கள்.
தீயை உருவாக்கும், மற்றும் வெடித்துச் சிதறவைக்கும்
குண்டுகளின் இணைத்தாக்கம் எங்ஙனம் எனப் பரீட்சிக்க
பொதுமக்கள் மீது வீசப்பட்டன இந்தக் குண்டுகள்.

தீயினதருகே தோழமை முகங்கள்
குளிரிலும் தோழமை முகங்கள்
இரக்கமேயின்றி நசுக்கப்பட்டும்,
அடித்துத் துவம்சம் செய்யப்பட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டில் வைக்கப்பட்டும் தோழமை முகங்கள்
வெறுமைக்கு முகம் கொடுத்திருந்தன.
ஏழ்மை முகங்கள் தியாகங்கள் செய்தன.
உமதான மரணங்கள் அனைவருக்குமான எச்சரிக்கை
மரணம் ஒரு தூர வீசப்பட்ட ஹிருதயம்.

உணவுக்குத் திண்டாடி உன் வாழ்வை
பணயம் வைக்கச் செய்தனர் அவர்கள்.
பூமிக்காய் வானுக்காய்
நீ பணம் செலுத்த வேண்டியிருந்தது.
தூக்கம், தண்ணீர் என்பவற்றுக்காய் நீ
இழக்க வேண்டியிருந்தது உனதனைத்தையும்.
துயரத்துக்கும் வறுமைக்கும் நீ பணம்
செலுத்த வேண்டியதாயிற்று.
அவர்களே அவற்றைச் செய்தார்கள்
இனிமையான நடிகர்கள்
எத்தனைத் துயரம் எனினும் அதி இனிமை
தொடர்ந்து ஓடும் நாடகத்தில் அந்நடிகர்கள்.

நீங்கள் மரணத்தை எதிர்பார்த்திருக்கவில்லை
வாழவும் மடியவும் தேவையான
உற்சாகமும் அச்சமும்.
மரணம் மிகக் கடினமானது கூடவே எளிதும் ஆனது.
பெண்டிரும் பிள்ளைகளும் தமதான விழிகளில்
புதையலைச் சுமக்கிறார்கள்.
தம்மால் முடிந்த வழியிலெல்லாம்
ஆண்கள் அதைப் பாதுகாக்கிறார்கள்.

தேநீர் பருகுதல்களின் போதான பத்திரிகை வாசிப்பில்
நாம் தெரிந்து வைத்திருக்கிறோம்
குவெர்னிகாவின் மக்கள் எளியர்.
ஐரோப்பாவில் எங்கோ கொலைகாரப் படைக்கூட்டம்
படை எடுக்கிறது மனிதாபிமானத்தின் மீதில்.
ஐரோப்பாவில் எங்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமதான வாசல்களருகே
துப்பாக்கி ரவைகள் மரணத்தை
நிகழ்த்திச் செல்கின்றன.

அவைகள் பிள்ளைகளோடு விளையாடுகின்றன
காற்றையும் விட நன்றாய்.
பெண்களும் பிள்ளைகளும்
அதே சிவப்பு ரோஜாக்களை
கண்களில் சுமக்கிறார்கள்.
அவர்தம் குருதி எல்லோரும் பார்க்கும் விதமாய்.
மின்னலுக்கும் இடிக்கும் பயந்தவர்கள்
நாம் என்று சிந்திப்பதே பொருந்தாதபடியிருக்கிறது.

எத்தனை அப்பாவித்தனம்
இடி ஒரு தேவதை, மின்னல் அதன் இறகுகள்.
இயற்கையின் அபாயங்களை பார்த்திட அஞ்சுவதால்
நாம் என்றுமே சென்றதில்லை அடித்தளத்துக்கு.
தலைக்கவசமும் சப்பாத்துகளும் அணிந்த
கம்பீர ஆண்மக்கள் விதவிதமாய்
இறக்குகின்றனர் விமானக் குண்டுகளை
எத்தனை பிரமாண்டமான கவனத்துடன்.
பூமியின் கீழே அலங்கோலங்கள்.
ஆண்கள் மீது இரத்தம்
விலங்குகள் மீது இரத்தம்.
கசாப்புக் கடைக்காரனைவிட
சிறப்பாய் மதிக்கத்தக்க ஒரு அறுவடை
அருவருக்கத் தக்கதாய்
அதி தூய்மையாய், துப்புரவாய்.

17596
பொது நூலகம்
யாழ்ப்பாணம்

கட்டுக்கடங்கா மரணத்தைச் சுகிக்கும்
ஒரு விலங்கைக் கட்டுப்படுத்திட முயல்க.
ஏன் அவர்களது சிசுக்கள் இறந்தனவென்று
அவற்றின் அன்னையருக்கு இயம்பிட முயல்க.
அழிவிலும் நிம்மதி கொணர விழைக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் ஒரு இரவு மீதமுள்ளது.
கதியற்றதான நிலைமையின் சகோதரியர்,
மரணத்தின் மகள்மார்கள்
அச்சமும் அருவருப்பும் ஊட்டுவனவாய்.
துயரத்தின் நினைவுச்சின்னங்கள்
அழகிய அழிவுகள் கண்ணிகளும், பண்ணைகளும் சகோதரரே,
இதோ நீங்கள் அழுகிப் போனதும்
உடைந்து போனதுமான எலும்புகளாக.

பூமி மாறுகிறது.
உமதான வட்டப் பாதையில் நீங்கள்
அழுகிப்போன ஆகிருதிகளாக.
காலத்தின் சுகபோகமாய் மரணம்
குறுக்கீடு செய்கிறது,
புழுக்களுக்கும், அண்டாங்காக்கைகளுக்கும்
நீங்கள் எமதான அதி உயிர்த்துடிப்புமிக்க
வாக்குறுதிகளாக இருந்தபோது
குவெர்னிகாவின் இறந்த 'ஓக்' மரத்தடியே
குவெர்னிகாவின் தூய வனங்களினடியே
ஒருமனிதன் மறுபடி வந்தான்
சோர்வுற்ற குரலில் கத்தும்
செம்மறியாட்டுக்குட்டியைக் கையிற் பிடித்தபடி.
ஒரு புறா அவனது இதயத்தேயிருந்தது.
அனைத்து ஆண்களுக்காயும்
அவன் பாடிக் கொண்டிருந்தான்
அன்பிற்கு நன்றி கூறுவதான புரட்சியின் தூய பாடலை.
சுதந்திரத்தையும், உரிமையையும் புறக்கணித்து
ஒரு மனிதன் பாடிக் கொண்டிருக்கிறான்.
அவனது வேதனையின் குளவிப்பூச்சிகள்
உடைந்த தொடுவானுக்குள் வேகமாக விரைகின்றன.
தேனீக்கள் அவற்றின் கூடுகளைக் கட்டின
மனிதாபிமானத்தின் இதயம் மீதில்.
அவனது பாடல் கேட்டு
குவெர்னிகா அப்பாவித்தனம் மேலெழும்பி வரும்.
அழிவை விட்டு குவெர்னிகா...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலையுணவு
Breakfast

அவன் கோப்பியை தன் கோப்பைக்குள் ஊற்றினான்.
பின் கோப்பியியூற்றிய கோப்பைக்குள் பால் இட்டான்.
சீனியிட்டு பின் தன் தேக்கரண்டியெடுத்து
பாலிட்ட கோப்பிக்கோப்பைக்குள் இட்டுக் கலக்கினான்.
பால் கோப்பியைப் பருகினான்.
பருகிய பின் கோப்பையைக் கீழே வைத்தான்
என்னோடு எதுவும் பேசாமலேயே.

சிகரட் பற்றவைத்தான்.
அவன் புகை கொண்டு வட்டங்கள் ஊதினான்.
பற்றியெரிந்த சாம்பலை சாம்பல்தட்டில் தட்டியும் விட்டான்.
என்னோடு எதுவும் பேசாமலேயே!
என்னைக் கிஞ்சித்தும் பாராமலேயே!

அவன் எழுந்தான் அவனது தலையில் தொப்பியிட்டான்.
மழையென்பதால் மழைச்சட்டையையும் அணிந்தான்;
பின் மழைக்குள் மறைந்து போனான்
ஒரு வார்த்தைக் கூட பேசாமல் ஒரு பார்வை கூடப் பாராமல்.
என் கைகளுக்குள் என் தலைகவிழ்த்தி அழுதேன் நான்!!

கொக்குவில் பொது நூலகம்
கொக்குவில் இந்துச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்ஸ்டன் ஹியூஸ்
Langston Hughes

## ஆறுகளைப் பேசும் கறுப்பன்
## The Negro Speaks of Rivers

ஆறுகளை நான் அறிந்திருந்தேன்.
மனுஷ இரத்தக் குழாய்களினூடே ஓடும் குருதியைக் காட்டிலும்,
அகிலத்தைக் காட்டிலும் பழைமைமிகு
ஆறுகளை நான் அறிந்திருந்தேன்.
எனது ஆத்மா அந்த ஆறுகளைப் போல ஆழமாய் ஆர்ப்பரித்து
நெடிதாய் வளர்ந்து கிடக்கிறது.
இள வைகறை மெல்லப் புலருகையில்
நான் நீராடினேன் யூப்ரடீஸில்.
என் சிறுகுடிசையை நான் அமைத்தேன் குவாங்கோவினதருகே,
அஃது எனை உறங்குமட்டும் தாலாட்டுமாறு.
நான் நைல் நதியை எதிர்நோக்கியதாய்
அதற்குமப்பால் மேலுயர்த்தினேன் பிரமிட்டை.
ஆபிரஹாம் லிங்கன் நியு ஓர்லியனஸ் வழியே வரலாறு படைத்தபடி நடக்க
பாடியதைக் கேட்டேன் மிசிசிப்பி.
மேலும் நான் கண்டேன் சகதிமண்ணாய் விரிந்திருந்த அதன் ஹிருதயம்
சூரிய அஸ்தமனத்தின் போது
பொன்னென மாறிப் பொழிதலையும்.
அடர்ந்த பழைமைமிகு ஆறுகளை நான் அறிந்திருந்தேன்.
எனது ஆத்மா அந்த ஆறுகளைப் போல ஆழமாய் ஆர்ப்பரித்து
நெடிதாய் வளர்ந்து கிடக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்ஸ்டன் ஹியூஸ்
Langston Hughes

## என் மக்கள்
## My People

இரவு அழகானது
என் மக்களது வதனங்கள் போல.
தாரகைகள் அழகானவை
என் மக்களின் விழிகள் போல
அழகு சூரியனும் கூட.
அழகு என் மக்களது ஆன்மாக்களும் அவ்விதமே.

17596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்ஸ்டன் ஹியூஸ்
Langston Hughes

## கனாக்கள்
Dreams

விரைவாகக் கனாக் காணுங்கள்.
கனாக்கள் இல்லையென்றால்
பறக்கவே முடியாத சிறகொடிந்த பட்சியென
ஜீவிதம் மாறும்.

விரைவாகக் கனாக் காணுங்கள்.
கனாக்கள் நமைவிட்டுப்போய்விட்டால்
பனியில் உறைந்து போன
வெற்றுக் கட்டாந்தரையாய்
ஜீவிதம் மாறி விடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேம்ஸ் றீவ்ஸ்
James Reeves

## அந்தக் கற்சிலை
## The Statue

கடைத்தெரு புறத்தே ஒரு கற்கதிரை மீதில்
கல்முகம் தரித்து உட்கார்ந்திருக்கிறான்
கல்லாலான பெருந்தகை அம்மனிதன்.
அவன் நல்லான்; மரியாதை மிக்கோன்;
போலவே வயோதிபனுமாம்.
எத்தனை வயதிருக்கும் அவனுக்கு என்றெதுவும்
சொல்லப்பட்டிருக்கவில்லை எந்தனுக்கு.
முன்னொரு காலத்தே பெரும்பணிகள் ஆற்றியிருக்கிறான் தான்.
அவைகள் என்னவென்பது பற்றியும்
எனக்கெந்த விபரமும் தெரியாது.
சதுரவடிவினதான அடிப்புறத்தளத்தின் மீதில்
அமர்ந்திருக்கையில் இடரார்ந்தும்
கவலைகளிற் தோய்ந்துமிருந்தது
அவன்தன் சதுர வடிவினதான கம்பீர முகம்.
நாள் மாறி நாட்கள் பல நகர்ந்தாலும்
அவன் அப்படியேதான் அமர்ந்திருந்தான்,
தனதடிப்புறத்தே அந்நியமொழியில் வரையப்பட்ட
வாசகங்களவை தரித்த அவன் ஆசனத்தே.
சண்டமாருதம் சூடாய் வீசினும், குளிராய் வீசினும்
அவன்தன் கல் உடைகளில் மடிப்பொருபோதும் விழவுமில்லை.
கல்லாலான அவனின் கையொன்று முழங்காலில் வைக்கப்பட்டிருக்க,
மறு கற்கையோ எனைச் சுட்டியடி நீள்கிறது.
ஓ! அவன் ஏன் அப்படியோர் பார்வை எனைப் பார்க்க வேண்டும்?
போகவும் பயப்படுகிறேன் அங்கே நிற்கவும் பயப்படுகிறேன்.
மரியாதைக்குரிய கல்மானிடா நீஎதைச் சொல்ல வருகிறாயடா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலான் தோமஸ்
Dylan Thomas

## ஒரு பெரு நகரை வீழ்த்திற்று
## காகிதத்திற் கையொப்பமிட்ட அக்கரம்
## The Hand that Signed the Paper Felled a City

ஒரு பெரு நகரை வீழ்த்திற்று
காகிதத்திற் கையொப்பமிட்ட அக்கரம்;
ஜீவிதங்களுக்கே வரிபோட்டு,
இறந்தோர் தொகையை இருமடங்காக்கி,
தேசத்தையும் இருதுண்டுகளாக்கிப் போட்டன
அனைத்துக்கும் வல்ல இவ்வைந்து விரல்களுமே.
ஆக, இந்த ஐந்து மன்னர்களும் கூடியே
ஒரு மன்னனது மரணத்தை நிகழ்த்திப்போயினர்.
சாய்ந்து வீழும் ஒரு தோளுக்கு
இந்த வல்லமைமிக்க கரம் தலைமை தாங்கிடும்.
சுண்ண வெண்கட்டிகளோடு குவிந்து ஒடுங்கும்
இந்த வீரம் மிகு விரல் இணைப்புக்கள்.
ஆக, அந்த இறகுப்பேனை கொலையோடு முடித்து வைத்தது.
கூடவே, பேச்சுக்கும் முற்றாய்ப் புள்ளியுமிட்டன.

கிறுக்கிய பெயரொடு கையொப்பமிட்ட இப்பெரும் கரங்கள்
மனிதர் மீது ராஜாங்கம் செய்தன அவனை அடக்கியொடுக்கி.
ஆதலினால், பஞ்சம் பொங்கிற்று, வெட்டுக்கிளிகள் வந்தன.
பிணியெங்கனும் போஷிக்கப்பட்டு வளர்ந்தது.

பொங்கிய புண் ஆற்றவும்,
இதயம் ஆறு கொள்ளத் தட்டிக் கொடுக்கவும்
முன்வரா இந்த மன்னர்கள் ஐவரும் என்னவோ
இறந்தோர் தொகையெண்ணிக் கணக்கிட மட்டும் முன்னே வந்தனர்.
சுவர்க்கத்தை ஆளும் ஒரு கரம்போலும்
வெறும் அற்பத்தை இக்கரம் ஆண்டது.
ஆயினும் என்ன?
கரங்களுக்கோ வடிப்பதற்குக் கண்ணீரில்லை...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம்:- சில்வா கபுதிக்யான்
Silva Kaputikyan
ஆங்கிலத்தில்:- ஜரினா செலஸ்னோவா

## பிரிவுகள்
Parting

ஒன்பது நிலையங்களுடனான ஒரு நகரம்
உன்னையும் என்னையும் ஒன்றாகப் பிணைத்தது.
பிறகு, அவ்வொன்பது நிலையங்களது கரங்களும்,
அவற்றினது இரும்புத் தண்டவாளங்களும்
உன்னைப் பிடுங்கிற்று எந்தச் சிந்தனையுமின்றி
என் கரங்களிலிருந்து வெளியே.
என் ஹிருதயம் வெறிச்சோடிப் போயிற்று,
இரயில்கள் தம் பயணங்கள் முடித்துவிட்டுப்போன
வெற்றுத் தண்டவாள மேடைகளில்
நிலவிடுமாப் போலோர் வெறுமையோடு.

இரைச்சல் நிறைந்த, பென்னம் பெரும்,
சுறுசுறுப்பாய் இயங்குகின்ற
எல்லா ஒன்பது நிலையங்கள் மீதும்
இதுவரைகாலும் நிலவியிருந்த
அனைத்துப் பிரிவுகளினதையும் விட,
இம்முடிவற்ற பிரிவுகளினது துயரம்
என்னைப் பிராண்டி அழுத்திற்று...
முன்கூட்டியே இலக்குக் குறித்த
ஒன்பது அடைவிடங்களுக்கும்
கடகடத்து உருண்டோடும் இரயில்களின்
துயர் முனகலையொத்த பிரியாவிடை விசில்கள்
நடுக்கத்தையும், அழுகையொலியையும்
உள்ளடக்கிய வரிசைகளைப் பின்னால் எஞ்சவைத்து
என் பெருமூச்சில் எதிரொலித்தபடியே...

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென் எக்ஸ்சின்

Wen Xin

## இதயத்தின் தியாகம்

Heart's Sacrifice

நீ காதலித்த அவன் மறுபடி வருவதற்கில்லை.
உனது ஆத்மாவினது வண்ணத்துப்பூச்சி
இவன் பக்கமாய் சிறகடிக்கும் இன்னுமே
அமைதியான நிதானத்துடன்.

நானும் உன்னை வெகுவாய் நேஸித்திருந்தேன்.
அத்தோடு காதலின் கதவு இலையை மூடியும் வைத்தேன்
நீ இன்னொருவனைக் காதலித்தபோது.
முன்னொருபோது நீ காதலித்தவன்
இதயத்திலிருந்து உன்னை நினைவூட்டிக் கொண்டிருக்கிறான்.
எப்போதுமே நீ தன்னோடு சேர்த்துக் கொள்ளாத இவன்
மறுபடி உன் புதைகுழியருகே நின்றிருக்கிறான்.

நீ உனதிதயத்தை கொடுத்தாய் அவன் வசம்
இன்னும் என் இதயமோ
உனக்குச் சொந்தமானதாய் இருக்கிறது.
எதையும் அறியவில்லை எவருமே
கடமையிற் சரிவர இயங்கும் மனைவிதானும்.
காற்று அந்த ரகசியத்தை
தான் மட்டும் அறிந்து கொண்டு
ஒரு பெருமூச்சைத் தொங்க விடுகிறது
புதைகுழியருகிருக்கும் மரத்தின் மீதில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவீந்திரநாத் தாகூர்
Rabindranath Tagore

## அந்த ஆலமரம்
The Banyan Tree

ஓ! குளக்கரை ஓரத்தே நின்றிருக்கும் நீண்டடர்
சிரசுடனான பெரு ஆலமரமே,
நீ மறந்து விட்டாயா உன் கிளைகளில் வந்து
கூடு கட்டிக் குடித்தனம் நடத்திப்
பின்னர் உன்னைக் கைவிட்டுப் பிரிந்து போன
பட்சிகளைப் போலவே
இந்தச் சின்னஞ் சிறுவனையும்?

உனக்கு நினைவில்லையா
அவன் அந்த யன்னலண்டை
குந்தியிருப்பானே,
உன் வேரின் சிக்கல் முடிச்சுக்களை
திரள் நூலிழைகளாய்
ஆழமாய் பூமிக்குள்
நீ புதைத்து வைத்திருப்பதை வியந்தபடி?

17596

தூக்கம் துயில் கலையப் புரள்வதைப் போல
நீரின் மீதில் உன் பெரும் கருநிழல்
வளைந்து நெளியும் இக்குளத்தே
தம் பாத்திரங்களை
நிரப்பிக் கொள்ள பெண்கள் வருவர்.

பொன் வண்ண ஓவியம் பின்னி சூரியவொளி நடமிட்டது
சிற்றலை மீதில்
ஓய்வற்றுப் பயணிக்கும் சின்னத் தொடர் வண்டிகள் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தண்டு படர்ந்திருக்கும் ஓரம் வழியே
தத்தமது நிழல்களுடன் ஒட்டியே
இரண்டு அன்னங்கள் நீந்தின.

அச்சிறுவன் அமைதியாய் அமர்ந்து சிந்தித்திருப்பான் இன்னும்.
அவன் இருக்க அவாவினான் சலசலத்து ஓசையெழுப்பும்
உன் கிளைகளின் ஓரவழியாய் வீசிடும் அந்த மாருதமாய்,
நீரின் மீதில் நேரமாக ஆக அகன்று நீளும் உன் நிழலாய்,
உனது உச்சியின் சுள்ளிக் கிளையில் அமர்ந்து
குதூகலிக்கும் ஒரு பட்சியாய்,
பாசிச்செடிகளிடையேயும், நிழல்களிடையேயும்
மிதந்தலையும் அவ்வன்னங்களாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொனிஷா அல்வி
Moniza Alvi

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

## எவரும் அறியாத ஒரு சிறுமி
## An Unknown Girl

நியோன் விளக்குகளுக்குள் தன்னைத் தொலைத்த
சாயங்காலத் தெருவொன்றின் மூலையில் அமர்ந்து
எவருமறியாச் சிறுமியவள் பட்டாடைக்குள் பாதி மூடியதன்
செம்மஞ்சள் வண்ண
முழங்கால்களில் கை ஊன்றி, கூம்பின் உச்சி வழி ஈரமென
கபில நிறக் கோடுகளாய் குளிர்மைப்பூக்க மருதாணி பீய்ச்சுகிறாள்
என் உள்ளங்கைகளில்.

அந்தச் சாயங்காலத் தெருவில் சில சில்லறைக் காசுக்காய்
எவருமறியாச் சிறுமியவள் என் உள்ளங்கைகளில்
மருதாணி பீய்ச்சுகிறாள்.
என் நிழல் பின்னிய சல்வார்கமீஸை ஊடறுத்து
மென்காற்று மேனியில் தவழ,
கோடுகளாய் மயிலொன்றின் உரு
வண்ணமாய் வந்து பரவி விரிகிறது
என் உள்ளங்கைகளில்.

தெருவை நிறங்கள் நீங்கிச் சென்று
பலூன்களின் அசைவுகளுள் தொலைக்கின்றன.
கடைகளின் முன்பகுதிகளில் சாய்ந்தபடி நிற்கும்
மேற்கத்தேய பொய்முடி தரித்த மாடல் பொம்மைகள்
எனைப்பார்த்து வெறிக்கின்றன.
திரைச்சீலைகளின் துணிகளாய் சோஃபா செட்டுகளின் விரிப்பாய்,
“மிஸ் இந்தியா1993” பதாகை என்னை மறைக்கிறது.
என்னிடம் உள்ளவை புதிய கபில நிற நரம்புகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சாயங்காலத் தெருவில் கைவந்த கலையாய்
எவருமறியாச் சிறுமியவள் என் உள்ளங்கைகளில்
மருதாணி பீய்ச்சுகிறாள்.
நான் அந்த கோடுகளாய் நிலைத்த மயிலில் மனம் தொங்கிக்
கிடக்கிறேன்,
சனக்கூட்டம் மிகைத்த ரயில்வண்டியின் வெளியில் தொங்கும்
மனிதர்களைப்போல.

தெருவின் சப்தங்கள் ஓய்ந்து அமைதி பூத்திருக்கிறது.
நத்தையின் ஈர ஊர்வலமென என் உள்ளங்கை
அடியில் இருக்கும் அந்த மென்பறவையின்
காய்ந்த கபில நிறத்துக் கோடுளை
உறங்கச் செல்லுமுன்னம் நான் துடைத்தழிப்பேன்.
ஒரு வாரத்துள் அவை அழிந்து விடவும் கூடும்.

இந்தியத் திருநாடு மறுபடி மறுபடி
என்னுள் வந்து வந்து நிலைக்க,
நியோன் விளக்குகளுக்குள் தன்னைத் தொலைத்த
சாயங்காலத் தெருவொன்றின்
மூலையில் அமர்ந்திருக்கும்
எவருமறியாச் சிறுமியவளுக்காய்
ஏங்கியபடி நான் காத்திருப்பேன்
என் கைகளை நீட்டியபடி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசிம் எசகீல்
Nissim Ezekiel

## தேளினது இரவு
## Night of the Scorpion

என் தாய்க்குத் தேள் கொட்டிய அந்த இரவை
நான் ஞாபகம் கொள்கிறேன்.
பத்து மணித்தியாலங்களாய் நீடித்த மழை
அரிசி மூட்டைக்கடியேயிருந்து
அது ஊர்ந்து வருமாப்போலச் செய்திருந்தது.
நஞ்சு பொதிந்த வால் குத்தியேந்தி மழையிரவில் இருட்டில்
அது மறுபடி வந்திருக்கிறது.

கிராமத்தவர்கள் ஓடோடி வந்தார்கள் ஈக்கூட்டம் போல.
கடவுள் பெயர் கூவியழைத்தார்கள் நூறுமுறை.
கொடிய தீயவை தீய்ந்து போகுமாப்போல.
மெழுகுவர்த்திகள் மற்றும் கைவிளக்குகள் ஏந்தி
வெளிச்சம் எங்கும் வீசி மண் சுவருள்,
இருளுள் அதனைத் தேடித் தீர்த்தார்கள்.
காணக்கிடைக்கவில்லை அதனை.
வாய்க்குள் முணுமுணுத்தார்கள்.
தேள் நகரும் ஒவ்வொரு கணமும் அம்மாவின் குருதிக்குள்ளும்
விஷம் விரையுமாம், அவர்கள் சொன்னார்கள்.
சிலவேளை அது எங்கேயும் குந்திக்கிடக்கலாம்,
அவர்கள் சொன்னார்கள்.
முன்பிறப்பில் உங்கள் பாவங்கள் இன்றிரவே எரிந்து சாம்பலாகும்,
அவர்கள் சொன்னார்கள்.
அடுத்த பிறப்பில் நீங்கள் சுமக்கவிருக்கும் துரதிஷ்டங்களை
இந்த வலியின் பீடிப்பு குறைக்கக்கூடும், அவர்கள் சொன்னார்கள்.
நிலையில்லா இவ்வுலகில் தீதின் அளவை நன்மைகளின் கணக்கோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வலி சமப்படுத்திச் சீராக்கிவிடும், அவர்கள் சொன்னார்கள்.
சுற்றிக் குந்தி அவர்கள் பகன்றார்கள்
அதன் நஞ்சு உங்கள் ஆசைகளின் தசையையும்,
உங்கள் இலட்சியத்தின் உயிரையும் தூயதாக்கி விடும்.
கூடவே சுற்றிக் குந்தியிருந்தார்கள் அவர்கள்.

தரையில் அம்மாவைச் சுற்றிக் குந்தியிருந்த
ஒவ்வொருவர் முகத்திலும்
புரிந்து கொள்ளுதலின் சாந்தி நிலைத்திருந்தது.
நிறைய மெழுகுவர்த்திகள், நிறைய கைவிளக்குகள்
நிறைய அண்டைவீட்டார்கள்,
நிறைய பூச்சிகள் முடிவற்று நீடித்த மழை.
என் அப்பா எளிதில் எதையும் நம்பாதவர்
மூலிகை மீது நம்பிக்கைக் கொண்டு
எல்லாச் சாபங்களையும், ஆசீர்வாதங்களையும்
தூசாய்த், துகளாய், மூலிகையாய்க், கலவையாய்
கொடுத்திடும் முயற்சியில் இருந்தார்.
ஒரு சொட்டு மெழுகு இட்டு தேள் தீண்டிய
பெருவிரலில் தீச்சுடர் விட்டார்.
நான் பார்த்திருந்தேன் என் அம்மாவுக்குள்
இறங்கி அந்தத் தீச்சுடர் பசி தீர்த்துப் போனதை.
மந்திரங்கள் சொல்லிச்சொல்லி ஐயர் விஷம்
போக்கத் திண்டாடுவதும் நான் கண்டேன்.
இருபது மணித்தியாலங்களின் பின்
அதன் விஷம் விடுபட்டுப் போயிற்று.

என் அம்மா இப்படி மட்டும் சொன்னார்,
நன்றி தெய்வமே தேள் என்னைத் தீண்டிற்றே,
என் குழந்தைகளை விட்டுவிட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாகாந்த்
Sitakant Mahapatra

## பாட்டி
## Grandmother

தீப்பெட்டியில் தீக்குச்சிகள் போல
பயணிகளை அடைத்திருந்த பேருந்தில்
சிடுசிடுத்து தூறல்தூறலாய் பொழிகின்ற மழையினூடு,
நிறைய நண்டுகளும் இறந்த நத்தைகளும் நிரம்பிக்கிடந்த
பயிர்நிலங்களிடையே குறுக்கறுத்து ஓடும் நதிகள் தாண்டி
குன்றும் குழியுமான சமதளமற்ற குறுகிய பாதையிற் பயணித்து,
பெரும் பிரயத்தனத்தில் நாம் அங்கே வந்தடைய
அந்திப் பொழுது பிந்தியுமாயிற்று இரவை அண்மிக்கிற மாதிரி.
அவள் அடிக்கடி சொல்வதுண்டு,
"மரணத்தின் கடவுளான எமன் கூட
சிரமப்பட்டுப் போராடி சுணங்கித்தான் வந்தடைவான்
நமது இந்தக் கிராமத்தை."

எல்லாமும் முடிந்து போயாயிற்று.
ரொம்பத்தான் தாமதித்தும் விட்டது.
பாடையைச் சுமந்து செல்வோர்
ஆயத்தங்கள் அனைத்தையும் செய்தாயிற்று.
நீண்ட அவளது இரண்டாம் பயணம்
ஏறத்தாழ ஆரம்பிக்கப் போகின்றது.
முன்னம் ஒரு தடவை அவள் பயணித்திருந்தாள்.
மாட்டு வண்டியிலமர்ந்து புளியம்பழ நிறத்தில் ஆடையணிந்த
ஒரு நாணம்மிகு மணப்பெண்ணாய் தன் தந்தையின் இல்லத்திலிருந்து
நமது இல்லத்துக்கு நிகழ்ந்திருந்தது அவள்தன் முதற் பயணம்.
"கடலால் கழுவி அரிக்கப்பட்ட
கரையாக இருக்கிறேன் பாதி விழுங்கப்பட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தால் ஒருமுறை வந்து போ என் மகனே!
சிலவேளை உன்னைப் பார்க்காமலேயே
நான் போய்விடலாம் யாரறிவார்?
வெள்ளநீரில் ஓரத்தில் நிற்கும் இம்மரம்
நிலைக்கமுடியாமற் தட்டுத்தடுமாறிச் சரிகிறது.
காற்றிலும், நீரோட்டத்திலும் ஆதரவற்றுச் சரிகையில்
ஓசைக்கும், ஓலத்துக்கும் தேவையென்ன?"

உள்ளறையில் நான் அந்த வெண்போர்வையைத் தூக்கியெடுத்தேன்.
விசும்பினைப்போலும் விரிந்தகன்றிருந்த,
பூமிபோலும் மௌனித்துக்கிடந்த
வரலாற்றின் வதனத்தை உற்றுப்பார்த்தேன்.
மறுபடி ஒருமுறை மௌனம் ஒரு நீள் பெருமூச்சை வெளியேற்றிற்று.

இரவு, சில்வண்டுகள் பாட
மூங்கில் காட்டுக்குள் மின்மினிப்பூச்சிகள்
மின்னிச் சிறகடித்தபடியிருக்கின்றன.
இருண்ட ஆகாயத்தில் ஒருசில தாரகைகள்
பளிச்சிட்டு மினுங்கிக் கொண்டிருக்கின்றன.
மரணவீட்டு சடங்குச் சாப்பாடு பறிமாறப்பட்டு
வந்தோர் புறப்பட்டுப் போயும் ஆகிவிட்டது.
சாணம் தெளித்துக் கழுவிய சுவர்களின் மீது
நிழல்கள் நடமிட்டன.

சுவர்ப்புறம் தன் முகம் திருப்பி, தன் முதுகுபுறத்தை
எமக்குக் காட்டியபடி நின்று அப்பா அழுதார்.
அவர் அழுவதை நான் பார்த்த முதற்தடவை அதுவேயாகும்.
அவரை ஆற்றுப்படுத்த நான் என்னதான் இயம்பிட முடியும்?
வீட்டைவிட்டு வெளியே போய்
வெறுமனே வானத்தைப் பார்க்கிறேன்
பாட்டி பிறிதொரு தாரகையாய் மாறிவிட்டிருந்தாள்.

அன்றுதான் நான் முதல் தடவையாய் உணர்ந்தேன்,
இந்த வாழ்க்கையில் ஒவ்வொரு அழுகிற நடவடிக்கையும்
மறைவான முறையில் ரகசியமாய்
எங்ஙனம் நிகழ்த்தப்படுகிறது என்பதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாபி மொழியில்:- அம்ரிதா பிரீதம்
ஆங்கிலத்தில்:- நிருபமா தத்
Amritha Prithm

## உனை எப்படியும் மறுபடி சந்தித்தே தீருவேன் நான்

I will meet you yet again

உனை எப்படியும் மறுபடி சந்தித்தே தீருவேன் நான்.
எங்கே, எப்போது என்பதெல்லாம்
எனக்கொன்றும் தெரியாது.
சிலவேளை, ஓவியம் வரையப் பயன்படுத்தும்
உன் கித்தான்துணி மீதில் நான்
உந்தனது கற்பனையின் உருவமாய் ஆகி,
ஒரு மர்மம் நிறைந்த கோட்டுக்குள்
எனையே கிடத்தியபடி
வைத்த கண் வாங்காது
பார்த்தபடியே இருப்பேன் உன்னை.

சிலவேளை,
உன் வண்ண நிறங்களால் தழுவிக் கொள்ளப்படும்
சூரியவெளிச்சத்தின் ஒளிக்கற்றையென நான் மாறி,
எனையே உன் கித்தான்துணி மீதில்
நானே சித்திரமாய் வரைந்தும் வைப்பேன்.
எங்கே, எப்படி என்பதெல்லாம்
எனக்கொன்றும் தெரியாது.
ஆயினும், உனை எப்படியும்
நிச்சயமாய் சந்தித்தே தீருவேன் நான்.

சிலபோது,
ஒரு நுரை தள்ளும் ஊற்றாய்க் கிளம்பியே வந்து
உந்தன் உடலெங்கனும் நீர்த்துளிகள் தெளித்து
கொதித்துத் தகித்துக் கிடக்கும் உன் மார்பின் மீதில்

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் குளிர்மையைக் கிடத்துவேன் நான்.
எனக்கெதுவும் தெரியாது.
ஆயினும் அப்படியொரு வாழ்க்கை
நிச்சயமாய் என்கூட நடந்து வந்தே தீரும்.
இவ்வுடல் அழிகையில் எல்லாமும் அழிந்துதான் போகும்.
ஆயினும் ஞாபகத்தின் நூலிழை
முடிவுறா நுண்ணணுக்கள் கொண்டன்றோ இழைக்கப்படுகிறது.
இத்துகள்கள்தனை ஒவ்வொன்றாய்ப் பொறுக்கியெடுத்து வந்தே,
அந்த நூல்மாலையை இழைத்திழைத்தாகினும்
உனை எப்படியும் மறுபடி சந்தித்தே தீருவேன் நான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலாதாஸ்
Kamala Das

## ஒரு அறிமுகம்
## An Introduction

எனக்கொன்றும் அரசியல் எல்லாம் தெரியாது.
ஆயினும், ஆட்சியிலிருப்போர் பெயர்கள்
சிலது அறிவேன், நேரு தொடங்கி
வாரமொன்றில் இருக்கும் நாட்களை,
மாதங்களை மறுபடி மறுபடி உச்சரிப்பதுபோல
சொல்லத் தெரியும் எனக்கு.
நான் இந்தியன், மலபாரில்தான் பிறந்தேன்
கபிலநிறத் தோல் எனக்கு.
மூன்று மொழிகள் பேசத் தெரியும் எனக்கு.
எழுதுவதற்கு இரண்டும், கனவு காண ஒன்றுமாய்.
அவர்கள் குடைந்தார்கள் என்னை,
ஆங்கிலத்தில் எழுதாதே அது உன் தாய்மொழியல்ல.
ஏன் என்னை நீங்கள் என் பாட்டில் விடுவதாயில்லை,
நீங்கள் அனைவருமே
விமர்சகர்களே, தோழர் பெருமக்களே,
அடிக்கொருதரம் விஜயம் செய்யும் மச்சான்மார்களே,
நான் விரும்பும் ஒரு மொழியில் நான் பேச
ஏன் நீங்கள் என்னை அனுமதிக்கிறீர்கள் இல்லை?
நான் பேசப் பயன்படுத்தும் மொழி என் மொழியாகிறது.
அதன் சிதைவுகளோ, விந்தைகளோ
எல்லாமும் எனதே, எனது மட்டுமேதான்.
பாதி ஆங்கிலேயனாய், பாதி இந்தியனாய் இருப்பது
வினோதமாயும் இருக்கிறது.
ஆயினும், ஒரு மனிதனாய் நானிருப்பது போல
இருக்க முடிவது நேரியதாயும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவில்லையா நீங்கள்?
அது என் மகிழ்ச்சியின் குரலாகிறது.
போலவே, என் அவாக்களினதும்,
நம்பிக்கைகளினதும் குரலுமாய் இருக்கிறது.
காகங்களுக்கு கரைவதற்கு, சிங்கங்களுக்கு கர்ச்சிப்பதற்கு
உதவுவது போல எனக்கு அது உதவுகிறது.
இது மனுஷனின் பேச்சுமொழி, கச்சிதங்கள் இல்லையாயினும்,
மனசின் பேசுமொழியாய் அங்கன்றி இங்கேயிருக்கும் மொழி.
மழை பொழியும் மேகத்தின் மொழி போலவோ,
புயலின்போது மரங்களின் மொழி போலவோ
இறப்பெய்திய சடலத்தின் தீயின் சிதையில்
தொடர்பருந்து வந்து போகும் முணுமுணுப்பு போலவோ,
செவிடருக்கும் குருடருக்குமாய் இருக்கும் மொழியல்ல எனது
மொழி.
குழந்தையாய் இருந்தேன் நான். பின்னர் அவர்கள் சொன்னார்கள்
உயர்ந்திருந்தேன் ஆதலால் நான் வளர்ந்து விட்டேன் என்று.
ஆங்காங்கே மயிர் துருத்தி வளர்ந்து என் கைகால்கள்
பருத்துமிருந்தன.
காதலை கேட்டேன் நான்
வேறு எதைக் கேட்பதென்று அறியா நிலையில்.
பதினாறு வயதேயான என்னை படுக்கையறையினுள் இட்டு
கதவு மூடி அடைத்தார் அவர்.
அடிக்கவில்லை என்னை அவர் என்றாலும்,
துயரப்பட்ட என் பெண் உடம்பு அடிபட்டதுபோல் வலித்தது.
என் மார்பகங்களினதும், கர்ப்பப்பையினதும்
பாரம் எனை நிலைகுலைக்க நான் பரிதாபமாய் சுருண்டேன்.
அப்புறம், நான் அணிந்தேன் என் சகோதரனின்
மேற்சட்டையையும், காற்சட்டையையும்.
என் தலைமயிரையும் குட்டையாய் கத்தரித்து
என் பெண்மையைக் கொஞ்சம் புறக்கணிப்பு செய்தேன்.
சாரி அணிந்து கொள், பெண்பிள்ளையாய் மனைவியாய்
நடந்து கொள் என்றும் அவர்கள் பகன்றார்கள். மேலும்,
பூ வேலைப்பாடுகள் செய்ய முடிந்த தையற்காரியாய்,
சமையலில் கெட்டித்தனமாய் இருக்கவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகர்களோடு பேரம்பேசிச் சண்டையிடவும் சொன்னார்கள்.
பொருந்தும் வண்ணம் இரு என்று
ஓ, கத்தினார்கள் அவர்கள் என்னை வகைபடுத்தி.
சுவர்கட்டில் அமராதே என்றார்கள்,
நம் சரிகைத் திரைச்சீலையிட்ட யன்னல்களை விலக்கி,
எட்டிஎட்டிப் பார்க்காதே என்றார்கள்.
அம்முவாய், கமலாவாய், அன்றி, நல்லது மாதவிக்குட்டியாய்
இருக்கச் சொன்னார்கள் அதுவே,
பொருத்தமான பெயரைத் தெரிவு செய்யும்
சரியான தருணமும் என்றார்கள்.
விளையாட்டில் லயித்து,
நடித்துத்திரியக் கூடாது என்றார்கள் அவர்கள்.
பைத்தியக்காரியாய், காமவெறி கொண்டு உழலும்,
காதலின் தேடலில் தோற்கையில் சங்கடத்தில் கத்திக்குழறும்
பெண்ணாய்
நான் இருந்திடக்கூடாதென்றார்கள் அவர்கள்.
நான் ஒரு மனிதனைச் சந்தித்தேன். அவனை நேஸித்தேன்.
அவனை நான் அவன் பெயர் சொல்லி ஒன்றும் அழைக்கவில்லை.
அவனும் யாவருமான ஒருவனாய்த்தான் இருந்தான்.
அவனுக்கும் என்னைப்போலவே,
காதலைத் தேடும் எல்லாப் பெண்ணைப்போலவும்
ஒரு பெண்தான் தேவைப்பட்டாள்.
அவனினின்றும் தாகித்த பேராறுகள் ஓடின.
என்னிடமோ களைப்பின்றி காத்திருக்கும் பெரும் சமுத்திரம்
இருந்தது.
நீ யார் என்று சந்தித்த ஒவ்வொருவரிடமும் நான் கேட்டேன்.
பதிலோ 'நான்' என்று முழங்கி வெளி வந்தது.
எங்கேயும், எதிலேயும் நான் என்று தன்னை
அடையாளப்படுத்திக் கொண்ட ஒருவனே இருந்தான்.
இவ்வுலகில், தன்னை ஒரு வாளென உறைக்குள்
ஒளித்து வைத்துக் கவனமாய் கட்டிக்காத்த அவன் இருந்தான்.
அந்த நான் என்ற அவன் தனியே குடித்தான்.
பன்னிரண்டு மணிக்கும் குடித்தான், நடு இரவிலும் குடித்தான்.
உணவு விடுதிகளிலும், புது ஊர்களிலும் அவன் குடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நான் எனும் மமதையில் ஆழ்ந்த அவன் சிரித்தான்.
அவன் காதலும் புரிந்தான். பின் வெட்கித்தலை குனிந்தான்.
தொண்டைக்குள் கிலுகிலுப்பை மாட்டிக்கொண்ட மாதிரி
செத்துக்கிடந்தான். நானே பாபங்கள் புரிந்தவன். நானே
முனிவனும்.
நானே காதலித்தவனும், பின்னர் ஏமாற்றப்பட்டவனும்.
உனக்குமான மகிழ்ச்சிகள் என்று எனக்கேதும் இல்லை
உனக்குமான வலிகளும் இல்லை.
நானுமே என்னை நானே என்று அழைத்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலாதாஸ்
Kamala Das

## என் பாட்டியின் வீடு
## My Grandmother's house

முன்னொருபோது எனக்கு அன்பே பொழிந்த
வீடொன்று அங்கிருந்தது
ஆயினும்,
நான் இப்போது தொலைவில்.
அந்தப் பெண்மணி இறந்துவிட்டாள்.
அந்த வீடு இப்போதெல்லாம்
மௌனத்துள் அமிழ்ந்து கிடக்கிறது.
புத்தகங்களுக்கிடையிலெல்லாம்
சர்ப்பங்கள் ஊர்ந்து திரிகின்றன.
அப்போது அவற்றைப் படிக்க
எனக்கோ
வயது போதுமாய் இருக்கவில்லை.
நிலவைப்போல என் குருதி
குளிர்ந்து விடுகிறது
அங்கு போய்
இன்று அடர்ந்த துயரில்
பாட்டியின்றி இருக்கும்
காற்று உறைந்துபோன வீட்டை
யன்னல்களின்
குருட்டுக் கண்கள் வழியே நான்
எட்டிப்பார்க்க நினைக்கையிலெல்லாம்.
அங்கிருந்து இருளை
ஒரு கையள்ளி வந்து இங்கு
வளர்த்த நாய் போல இருக்கும்
என் படுக்கையறைக் கதவின் பின்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைக்க வேண்டும் நான்.
உன்னால் நம்ப முடியாது
என் அன்புக்குரியவனே,
என் அந்த வீட்டின்
அன்பையும், பெருமிதங்களையும்.
அப்படியோர் வீடு அது.
நான் இன்று
எங்கோ
ஒரு புதியானின் இல்லத்து வாசலில்
சிறு தொகையிலேனும்
அன்பு பெற நாடி
என் பாதைகள் தொலைத்தவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினா அகர்வால்
Bina Agarwal

## சீதை, நீ பேசு

## Sita speak

சீதை, அக்கதையின் உன் பக்கத்தை நீ சொல்.
அதன் மறுபக்கத்தை நாம் மிக நன்கு அறிவோம்.
உன் தந்தை உன்னை
ஒரு ராஜகுமாரனுக்கு மணம் செய்து கொடுத்தார்,
உன் கணவன் கையிருக்கும் வில்லைப்போலவே
எளிதில் வளையக் கூடியவளாய் உன்னை இருக்கச் சொன்னார்
அந்த மந்திர வில்லை ராமன் உடைத்ததை நீ கவனிக்கவில்லையா?
அங்கிருந்து நீ அனுப்பப்பட்டபோது, இலட்சிய மகளான நீ
பணிவொடு தலைகுனிந்து நடந்தாய் என்று அவர்கள்
சொல்கின்றனர்.

உன் கணவனொடு நீயும் நாடு கடக்கத் தீர்மானித்தாய்.
தனிமைப்பட்டாய், கடத்தப்பட்டாய் பின்னர்
நிராகரிக்கப்பட்டாய்.
கனன்றிடும் தீச்சுவாலையில் கற்பு பரீட்சை.
பலியாள், இருமுறை பலியாளாக்கப்பட்டாய்.
ஆன்மாவை பொசுக்கிவிடாமல் அந்தத் தீச்சுவாலைகள்
பூக்களாய் மாறியிருக்க முடியுமா?

அவர்கள் சொல்கின்றனர் நீதான் இலட்சிய மனைவியாம்
நீ அவனைக் கேள்வி கேட்கவில்லை.
அவனை அவன் வழியில் போகவிட்டாய்
உன் கதை வரைந்த கவிகள் சொன்னார்கள்.
ஒரு பெண் ராமாயணம் கேட்கத் தகுதியற்றவள்
ஒரு விலங்கைப்போல
அடிபட்டு மாய மட்டுமே அவள் பொருத்தமானவள்.
அத்தகைய கவிதை என்றேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குப் புகழைக் கொண்டுவருமா?
இருப்பினும்
அந்தப் பொய்மைகள் தொடர்ந்தபடியிருக்க
எதிர்ப்புகள் எவையுமின்றி
அவர்கள் தங்கள் கவிதைகளைப் பாடிக்கொண்டேயிருந்தனர்.

சீதை, நீ பேசு
அந்த மந்திர வில்லை ஒற்றைக் கையால்
லாவகமாய் தூக்க முடிந்தவள் நீ
ஒரேயொரு சொல்லால்
பூமிக்கு கட்டளையிட முடிந்தவள் நீ
அவர்கள் எப்படி உன்னை மௌனமாக்கினர்....?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினா அகர்வால்
Bina Agarwal

## வயோதிபம் தழுவுகையில்
## On the Passing of Age

முதிர்ந்த ஆலமரத்தினது கரடுமுரடான வேர்களை
படரும் பச்சைப் பாசி மூடித்திரையிடுவது போல
சாயங்காலப் பொழுது பதுங்கிப்பதுங்கி எட்டிப்பார்த்தது
என் பாட்டன் பாட்டியின் மடிப்புகள் மீதும்.

ஒரு இளம் பிரபஞ்சத்தின் காயம் தரும்
புத்திக்கூர்மையிலிருந்து நீங்கி மங்கல் திரையிட்டு
அவர்கள் அமர்ந்திருந்தனர் அருகருகே
தோட்டத்துக் கதிரைகள் மீதில்
எந்தத் தொல்லைகளுமற்ற நிசப்தத்தில் உறைந்து.

அவர்களது மகனையோ, மகனின் மகனையோ,
மகளின் மகனையோ பார்க்கவென்று வருகைதரும் பலர்
அழுத்துவர் இடையறாமல் அழைப்புமணியை
அவர்களை ஒரு பொருட்டெனக் கொள்ளாமல்.

வயோதிபத்திற்கு ஞானம் கிடையாது இப்போது
இளமையின் அறிவற்ற நடத்தையும் கிடையாது
நாம் அறிய வேண்டியிருப்பதற்குமப்பால்
எழுதப்பட்டிருக்கின்றன புத்தகங்களில்.

சேர்ந்து ஒன்றாகவேயிருக்கும் பழக்கம்
அவர்களைக் கட்டிப்போடுகிறது
அவர்களது காத்திருப்புகளில்.
பகலுணவு பன்னிரண்டு முப்பதுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின்றி அவளொன்றும் உண்ணுதற்கில்லை
போலவே, நாலுமணிக்கான தேநீர் பருகுதல்களிலும்.

நடந்து திரியும் நேரங்களில் நடைத்தடி
அவருக்கு ஒத்தாசை புரிவது போல
அவளது உறங்கிடும் வடிவம்
ஒத்தாசை புரிந்திடும் அவரது கனாக்களுக்கு
அவர்களது மனங்கள் இருவேறு திசைகளில்
அலைந்து திரிந்தாலும்.

பாரம்பரியத்தின் பகுதியாய்
நிகழ்காலம்தனை ஏற்றுக்கொண்ட
அவளது இப்போதும் மகிழ்வூட்டும்
குடும்பத்து பாரம்பரிய நற்சீதனங்கள்
கடந்தகாலத்தின் விடுதலையை அள்ளித் தந்தது
அவர் தந்த இல்லம்.
மடித்துப் பொக்கிஷம்போல பாதுகாப்பாய் வைக்கப்பட்டிருக்கும்
தாய்வீட்டு சீதனத்தின் வெல்வெட்டு ப்ளவுஸ்களைப் போலிருக்கும்
பாட்டியின் வயோதிகத்தின் சுருக்கங்களுடனான கையினது தோல்.

வண்ணத்துப்பூச்சியின் சிறகுகளை நான் பிடிக்கிறேன்
ஒரு குழந்தையைப்போல.
அதுவோ நகர்ந்தே செல்கிறது
சிதைவுற்று உடையும் வண்ணங்களினது
துயர ஞாபகங்களை பின்னால் எஞ்சவைத்தே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர்.ராம் ஷர்மா
Dr.Ram Sharma

## மனுஷ உன்னதங்கள்
Human values

அவசர பொருள் முதல்வாத ஓட்டப்போட்டி,
சுமந்த உன்னதங்களை மறந்து போனோம் நாம்.
அனைவருக்கும் துயரங்கள் தந்த
போலியாய் மின்னும் பொருளினைப்
பின் தொடரும் நமதான ஓட்டம்,
ஒருவரைத் தீரமாய் முந்த வேண்டி
ஒருவரை ஒருவர் தள்ளுகிறோம்.
மனுஷ உன்னதங்கள் அறவேயில்லை நம்வசம்.
அழுகையும், வெற்றுச் சாயங்களும் மட்டுமிங்கே.
இதயங்களற்றவராய் நாமிங்கே.
ஏமாற்றும் கலை மட்டும் கற்றோம் நாம்.
அடுத்தவர் முன்னேறச் சகியோம் நாம்.
எப்போதும் நாம்.. நாம்... நாம் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெங்காலி மொழியில்:- மார்ஷல் ஹெம்ப்ராம்
ஆங்கிலத்தில்:- ஜெயதீப் சாரங்கி
Marshal Hem bram

## ஈட்டியும் வில்லும் ஏந்திடுவோம் நாம்
We shall take the bow And arrow

ஒரு பேரிடியோடு அவர்கள் இயம்பினர்
இந்நிலம், இக்குளம், இப்பண்ணை வீடு எனதல்லவென்று.
அவர்தம் சிவந்த கண்கள் துளைத்துச் சென்றன எம்மை
இவையெல்லாவற்றையும் விட்டுச் செல்லவும்,
முகவரியற்றவர்களாய் நாம் இருப்பதற்குமாய்.
ஆயினும் எண்ணிக்கையற்ற கதைகளும்
அவற்றோடு இணைந்தே கிடந்தன.
இந்த மனிதர் வாசம் செய்யா வனப்பிரதேசம்
வசித்திடத்தக்க நிலமாய்
மகிழ்வு பூக்கும் குடும்பங்களோடு குலுங்கிச் சிரிக்க
நாம் போராடினோம்.
நீ கேட்டாயானால் என்னிடமிருந்த இவையனைத்தையும்
எனது நிலம், எனது குளம், எனது பண்ணை நிலம் அனைத்தையும்
நான் என்ன செய்ய முடியும் ஈட்டியும், வில்லும் ஏந்துதல் தவிர?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திலிங்கையா
Siddhalingaiah

## பசுவின் பாடல்
## Song of the Cow

அவர்களே என்னை எஜமானன் அருகில் நிறுத்தினர்.
மரத்தில் அடித்த ஆணியில் அவர்களே
என்னைக் கட்டியும் வைத்தனர்.
கைநிறைய வைக்கோல் தந்தே என் உரிமையாளன்
மகிழ்வோடு நான் வாழ வழியும் செய்திட்டான் பாருங்கள்.

கடவுள் போன்றனன் என் உரிமையாளன்
என் மடிதாங்கும் ஊற்றுக்கிணறு கண்டு பூரித்து
பெருமையில் அவன் பிதுங்கிக் கிடக்கிறான்.
அரசன் போன்றனன் என் உரிமையாளன்.
தொழுவத்தே என்னைக் கட்டி வைத்து
"அம்மா", "அம்மா" என்றழைக்கிறான் ஆசையாய்.
அந்த சொல்லுக்கே எவ்வர்த்தமும் இல்லையோ இனி?

நான் வழங்கும் கட்டியான சுவை பாலுக்கு
என் சொந்தக் கண்ணெதிரிலேயே
நீர் கலக்கினர் அவர்கள்.
மரவண்டி சுமையதிகம் என் உரிமையாளனோ
பீமனைவிட ரொம்பப் பாரமானவன்.
நடனமாடு பசுவண்ணா நடனமாடு
அவர்கள் இயம்புவர் எனைப் பார்த்து.
"சங்கராந்தி" பண்டிகைக் கொண்டாட்டத்தின்போது
நானோ நெருப்பில் குதித்தாக வேண்டும்.
கழுவப்படாதிருக்கும் என் பின்புறம்
மலர் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும் என் கொம்புகள்.
அவர்கள் என்னைத் தள்ளி விடுவர், தீக்குள் தள்ளிவிடுவர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திலிங்கையா
Siddhalingaiah

## என் மக்கள்
## My People

பசிக்கொடுமையால் மரணிப்போர், மயக்கமுறும்வரை
உதைக்கப்படுவோர்,
கைகால் தொட்டு மற்றோர் முன் தலைவணங்கி மண்டியிடுவோர்,
கைகூப்பி தம் மேலானோர் முன் பணிவாய் நிற்போர்
இவர்களே, இவர்களே என் மக்கள்.
உழுது விதைத்து அறுவடை செய்து வெயிலில் வியர்க்க
பெருமூச்சோடு களைத்து ஓய்ந்தும்
உண்ணவும், உடுக்கவும் கொஞ்சமே பெற்று
வெற்றுக் கரங்களோடு இல்லம் செல்வோர்
இவர்களே, இவர்களே என் மக்கள்.

கற்கள் சுமந்து கூரை வேய்ந்து பங்களாக்கள் கட்டியெழுப்பி,
அழியும் சின்னங்களினடியில் தம் துயர்களுக்காய் நசுங்கி உழன்று,
பாதையில் வீழ்ந்து குரல் தோய தமக்குள் அழுவோர்
இவர்களே, இவர்களே என் மக்கள்.
அனல் பறக்கும் சொற்களால் ஆராதிக்கப்படுவோர்
சுட்டுச் சாம்பலாய் பொசுக்கப்படுவோர்
கடவுளவன் பெயரை உதட்டில் பூசிக்கொண்ட மாந்தரின்
சப்பாத்துகளும் செருப்புகளும் தைத்து
அநியாய வட்டியில் பாதிப்புற்று அல்லல்படுவோர்
இவர்களே, இவர்களே என் மக்கள்.

தங்கத்தையே தோண்டியெடுத்தும் உண்ணவும்
வழியின்றிப்போவோர்
அழகழகாய் ஆடைகள் நெய்தும் நிர்வாணமாய் அலைவோர்
அவர்கள் ஏவுவதைச் செய்வோர் கொஞ்ச வளியில் சுவாசிப்போர்
இவர்களே, இவர்களே என் மக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமா கவாய்
Uma Gavai

## கூடு
## Nest

சுழன்றடிக்கும் தீயில் சுட்டெரிக்கப்படப்போகும் இந்தக் கூட்டை
அன்பே, எனக்காய் நீ ஏன் கட்டினாய் இந்த மழையில்?
என் இதயத் தோட்டம் மொட்டுக்களை
வெறியார்வததோடு மறைத்து கனவுகளைப் புஷ்பித்தது.
ஏனிந்த கூட்டை நீ வீணிற் கட்டினாய்?
ஒரு பட்டுக்கனவு சிறகு விரிக்கிறது
கண்ணிமைகளின் நுனி மீதில்.
பட்டுநூலின் இணைப்புகளைத் துண்டித்து
ஏனிந்த கூட்டை நீ கட்டினாய்?
என் மனது காற்றாய், நீராய் மாறிற்று.
எனக்கு உதவுவார் எவருமில்லை.
சுழல்காற்றில் என்கூடு மூழ்கடிக்கப்படுகிறது.
அவ்வில்லத்தே நான் காலடி எடுத்து வைக்கையில்
வார்த்தைகளின் ஈரலித்த பொழிவில்
என் கூடோ கவிதைகளின் பக்கங்களே போலும்
சடசடத்துக் கிடக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குல்சார்
Gulzar

## அந்தத் தட்டுகை
## The Knock

ஒரு கனவின் தட்டுகைக்கான பதிலாய்
கதவை நான் திறந்தபோது
நேரமோ விடிகாலைப் பொழுதாயிருந்தது.
பரிச்சயப்பட்ட முகங்களை நான் தரிசித்தேன்.
எல்லைகள் கடந்து
சில விருந்தினர்கள் வந்திருந்தனர்.
அவர்களை வரவேற்று நான்
முற்றத்து வராந்தாவில் அமர வைத்தேன்.

அவர்கள் கொணர்ந்த கறியோடு
பறிமாறச் செய்வதற்காய்
தந்தூரில் ரொட்டியும் சுட்டேன்.

நான் என் கண்களைத் திறந்தபோது
யாருமே இல்லை அங்கே என் இல்லத்தே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குல்சார்
Gulzar

## கண்கள்
## Eyes

அடிவானின் மீது
வைகறைப் பொழுதின் காலைப் புலருகை
உன் கண்களிலேயே,
இரவு மூடிவைத்தது
ஒரு சிப்பியைப் போல உன் கண்களிலே.

உன் கண்கள் தொழுகையில் முழந்தாளிடும்
இரு அர்ப்பணிப்பாளர்களா?

உன் கண்களை நீ உயர்த்துகிறபோது
உன் பார்வை கோயில்மணியினது
ஈரச்சப்திப்பை எதிரொலிக்கிறது.
உன் கண்களை நீ தாழ்த்துகிறபோதோ
நிசப்தமும் துயரமும் கவிந்து கொள்ள
தொழுகைக்கான அழைப்பும் நிறைவு பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்னு என்.மொஹப்பத்ரா
Bishnu N. Mohapatra

## நீதி
## Justice

நாட்கள் நகர்கின்றன.
ஆனால்
காலத்தின் கொடுங்கோன்மை குறைந்தபாடில்லை.
அண்டம் விரிவடைகிறது பால்வீதி நீட்சிபெறுகிறது
எதுவும் குரூரங்களைக் கட்டுப்படுத்தவில்லை.

காற்றையும் தழலையும் பத்துத் திசைக்கும்
தலைமை தாங்கிச் செல்லும்
பத்துக் கடவுளர் பெயரால் சத்திய வாக்குறுதியளித்து
அரை உயிரோடு சோர்வு தரும் இருளோடு
என்னுள்ளே என்றும் விழித்திருக்கும் காவலாளி சொல்வான்
நான் இந்த தாங்கொணாக் கொடூரங்களுக்கு
எதிராய் விழித்துக்கிடக்கிறேன் என.

என்னை மன்னித்து விடு என்னை மன்னித்து விடு.

இரத்தத்தின் தழும்புகளால்
நான் பூமியின் முதுகுப்புறத்தை மூடியிருக்கிறேன்
பச்சைப்பச்சையாய்
எனக்கு இலாபம் தரும் விடயங்களுக்காக.
யூதனை நச்சுவாயுக் கிடங்கிற் கிடத்தி,
வெள்ளையனை கறுப்பனிலிருந்தும்
பணக்காரனை ஏழையிலிருந்தும் பிரிக்க
நிலைக்குத்தாய்ச் சுவரெழுப்பி,
சமூகங்கள் சாம்பலாகுமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுண்டுகளை அள்ளிவீசி,
ஆறுகள், மீன்கள், அல்காக்கள், செடிகள்,
வானவில் வண்ண முகங்கள், கானகப்பூக்கள்,
மின்னும் தாரகைகள் அனைத்தையும்
என் காழ்ப்புணர்ச்சியின் தீக்கிடங்கிற் தள்ளி.

எனது எண்ணிறந்த குரூரங்களுக்காய்
மன்னித்துவிடு என்னை மன்னித்துவிடு என்னை.

ஆயினும் நீ பகர்வாய்
பூமி வினவவில்லை உன்னைத் திருந்திக் கொள்ளுமாறு.
அது நீதி கோரும் தண்டனை வழங்கக் கேட்கும்.
மன்னிப்புக்கோரல் ஒன்றும் காயங்களாற்றாது.
வாழ்வோருக்கு சாந்தியும் கொணராது.

எனவே, உனதான கோடரியின் அரியும் கத்தியின் கீழ்
என் கழுத்தைக் கிடத்துவேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுர்ஜித் பதார்
Surjith Patar

## என் அம்மாவும் என் கவிதையும்
## My Mother and My Poem

என் அம்மாவுக்கு
என் கவிதையின் அர்த்தம் புரியவில்லை
அஃது என் தாய்மொழியில் எழுதப்பட்டதாயினும்.
அவள் அவற்றைச் சேர்க்கிறாள்.
என் புத்திரன் மனதுள் ஏதோ
துயரம் புதைந்திருக்கிறது என்று மட்டும்
புரிந்து கொண்டு
நான் இங்கிருக்கையில் அவனது இத்துயரம்
எங்கிருந்து வந்தது?
என் படிப்பறிவில்லா அன்னை பெரும் கவனத்தோடு
என் கவிதையை ஆராய்ந்து சொல்கிறாள் தனக்குள்ளேயே,
“பாருங்கள் மானிடரே பாருங்கள்.
எம் கருவறையில் நாம் சுமந்த புத்திரர்கள்
தம் துயரங்களைபத்திரிகைகளுக்கே சொல்கிறார்கள்,
நமக்கல்லவே.
அவள் பத்திரிகையை நெஞ்சோடு எடுத்தணைக்கிறாள்
தன் புத்திரனை
நெருங்கிட இதுவேனும் ஒரு வழியாகட்டும்
எனும் நம்பிக்கைக் கொண்டு!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலாதார் மண்ட்லோய்
Leeladhar Mandloi

## ஒரு நாள்...
## One Day

ஹீலியம், நைதரசன், ஒட்சிசன் அனைத்தையும் திருடிக்கொண்டு
நிச்சயமாய் எவர்க்கும் சொல்லாமல் நான் நேரே போவேன்
ஒருநாள் சமுத்திரம் தனை நோக்கி.
இருள் சூழ ஆரம்பிக்கையில் ஆமையின் ஓட்டிலுட்கார்ந்து
நான் போயிடுவேன் அதன் அடியாழத்துக்கு.
கடற்பிராணிகளைச் சந்திப்பேன்
மேலும் ஆழத்தே மூழ்கிய குன்றுகளைத் தொட்டுப்பார்ப்பேன்.

திருடுவேன் நான் மீன்களது மென்சூட்டுத் தழுவலை.
ஒளிரும் மீனின் வாற்புறம் பிடித்து மேற்புறம் எட்டிப்பார்ப்பேன்.
பாரமற்ற கால்கள் தரித்து கடற்பூக்களின் அற்புத அழகில்
சிறையாவேன்.

சமுத்திரம் அறியா ஒரு கணப்போதில் அதன் பளபளப்பை
ஒரு கைப்பிடியளவு திருடி இதயத்தினாழத்தே ஒளித்தும்
வைப்பேன்.
அவர்கள் என்னை ஒரு கள்வனென்று அழைக்கட்டும்.
ஒருநாள் நான் திருடியே தீர்வேன் ஒரு கைப்பிடியளவேனும்
சமுத்திரத்தினது முனைப்பான கூசொளியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பா ஆர். ஆச்ர்யா
Pushpa R. Achrya

## பூக்களின் கனவுகள்
## The Dreams of Flowers

ஒருநாள் என் கனவில் ஒரு கவிஞன் கீழிறங்கி வந்து
என் காதோடு முணுமுணுத்தான் "பூக்களின் கனவுகளை!"

என் கனவழிந்தது நான் விழித்தபோதில்
ஆயினும் நான்
அடிக்கொரு தரம் எண்ணி வியந்தேன்
எதைக் கனவு காணும் பூக்கள் என்றே.

எவரும் அறியாத கனவு கண்டு தூக்கத்திற் சிரிக்கும்
பச்சிளம் சிசுக்களின் கனவுகளை ஒத்திருக்குமா பூக்களின் கனவுகள்?

அன்றி,
குளிரோடு பயணிக்கும் தம் வாழ்வை
சூடான பகற்சூரியனது வெம்மையில்
குளிர்காயவிட்டு
உறக்கத்தில் எதையெதையோ உளறிக் கொட்டும்
வயதான முதியோரின் கனவுகளைப் போலிருக்குமா
பூக்களின் கனவுகள்?

எதைக் கனவு காணும் பூக்கள்?
அவைதம் கனவுகள் வண்ணத்துப்பூச்சிகளின்
சிறகடிப்பாய்ப் பறப்பதுவா?
அவைதம் கனவுகள் தேனீக்களின் ரீங்காரம் போலவா?
அவைதம் கனவுகள் மழையினது
தூறலாய் மென்னிசை சிந்திடுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைதம் கனவுகள் வானவில்லின்
வண்ணக்கலவையெனத்
தோற்றம் காட்டுவதா? அன்றி,
காலைப்பொழுதின் மிருதுத் தென்றலில்
மிதந்து மிதந்து போமோ அவற்றின் கனவுகள்?
பூக்களுக்கு அச்சம் தருவதாய் அமையுமா
அவற்றின் கனவுகள்
பூந்தாதுகளிலிருந்து கீழே உதிர்வதான
அச்சமோ அன்றி,
அறியாத அந்நியக் கரங்களால்
பறிக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சமோ?
அன்றாடம் காலையில்
நான் அவதானிக்கிறேன் பூக்களை
சிந்திக்கிறேன் நான் அவை பற்றி.
அவற்றுக்கு ஒவ்வொரு இரவும்
புதிது புதிதாய் கனவுகள் தோன்றுமோ?
அல்லது கண்டதையே அவை
மீள மீளக் காணுமோ?
நானறியேன் எங்கே அந்தக் கவி
மறைந்து போனான் என.
ஆயினும் நிச்சயமாய் மறுபடி
அவனைக் கண்டால் கேட்பேன்
எதைக் கனவு காணும் பூக்கள் என்றே.
அவைதம் கனவுகள் நமதை ஒத்திருக்குமா?
அன்றி அதிலும் அவை நம்மில்
இருந்து வேறுபட்டிருக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுத்பா ஹனும் சலீமா பேகம்

Lutfa Hanum Salima Begam

# ஒரு கவிதை

## A Poem

உதிர்ந்த அவ்விலைகள் வேண்டும்
மரத்தின் கிளைகளுக்கு மறுபடி திரும்பும்
ஒரு பசுமைப் பயணம்.
பறவைகள் முட்டைக்குள்ளே
மஞ்சட் கருவாயிருக்க வாஞ்சை கொள்ளும்.
ஆறுகளோ இறந்த மீன்கள் மறுபடி வர அவாவும்.
நிழல் விரும்பும் மரங்களாயிருக்க,
மனித மனங்களாய் இருக்க.
தீயின் இதயத்துக்கு மீளத்திரும்பி
செந்தனலின் பாதையில் திரும்ப புகை நாடும்.
நீரோ கற்களாயிருக்க, கற்களோ
துகளாகி மனித மனங்களில் இருக்க
நானோ
நாடுவேன் ஒரு பயணம்
பச்சைக்கூடாய், நீருக்கூடாய்,
கற்கள், சொற்கள், மெட்டுகளுக்கூடாய்
உனக்குள் உருகி வழிந்து
என்னிடம் மீளத்திரும்ப□.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

H.K கவுல்
H.K.Kaul

## அந்தக் கற்கோயில்கள்
## The Temples of Stone

அந்தப் பள்ளத்தாக்கில் தன்னந்தனியே இருப்பர் கடவுளர்கள்
சுற்றி காவலாளிகளோ, சிரம்பணிவோரோ எவருமின்றி.
அன்றாடம் காலையில் தத்தமது வேண்டுதல்களுடன்
கடவுளர்களைச் சுற்றிச்சுற்றி வரும்
பக்தர்கள் கூட்டத்தினர் எங்கே போய்விட்டனர்?
செல்வத்துடனும், சுற்றத்தாருடனும்
பாதுகாப்பான பிரதேசங்கள் நோக்கி
இவர்கள் புறப்பட்டுப் போயினதாய்
என்னிடத்தே பகரப்பட்டது.
ஆதலினால், கடவுளர்களோ தன்னந்தனியே
கற்களில், கோயில்களில், கற்கோயில்களில்.
கற்கள் பொன்னை விட மலிவானவைதாம்
இரண்டாம் பட்சமானவைதாம் இயற்கையாகவே.
இப்போதோ அந்தப் புதுப் பிரதேசத்தே
வணங்கி முழந்தாழிடும் பக்தர்கள்
செதுக்கி வடித்திருப்பர் புதுச்சிற்பங்களை கற்களில்
கொஞ்சம் வணங்கிக் கொள்வதற்காய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேபாள மொழியில்:- Suman Pokharel
ஆங்கிலத்தில்:- Manu Manjil

## தினமும் காலையில்
## Every Morning

அன்றாடம் எங்கோ
இரத்தம் சிந்தப்பட்டதைச் சொல்லும்
சேதியொன்றுடன் விழிக்கிறேன்
உதயகாலத்தே.
நான் உயிருடனிருக்கிறேனாவென
என் உடலே அறிய அவாவுறுவதை
நான் உணர்ந்து கொள்கிறேன்.
என்னைக் காத்திடும் கடவுளுக்கு
என் நன்றியறிதலை அளிப்பேன்
“இறைவா நன்றி,
நேற்று மரணித்த
அன்றி கொல்லப்பட்டோர் பட்டியலில்
எனது நாமம் இல்லை!” என்பதற்காய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணும் ரியாஸ்
Tarannum Riyas

## அறைகளிலிருந்து வாசற்புறங்களுக்கு
From Rooms to Doors

உன்னை நான் ஒருபோதும் கேளேன் இனி.
சாயங்காலப் பொழுதின் என் பகிர்தல்களை ஏன்
சாராயத் தவரணையில் விட்டுப்போனாய் என்பது பற்றி.
உனை நான் மறுபடி என்றுமே கேளேன்
நீ சிதிலமாக்கிய சத்திய வாக்குறுதிகள் எவை குறித்தும்.
உனதெந்த மன்னிப்புக் கோரல்களையும் பற்றி
வினாத் தொடுப்பதற்கில்லை நான் இனி.
நான் மனம் குமைதற்குமில்லை இனி.
நம் குழந்தைகளுடன் நேரம் ஒதுக்க
ஒருபோதும் உன்னைக் கோரேன்.
உன் பொழுதுகளை நீ வீட்டில் கழிக்க
உன்னை இனியெப்போதும் வேண்டேன்.
இன்னும் எத்தனைக் காலம்தான் நான் ஜீவித்திருப்பேன்?

17596

நான் போன பின்னால் இவ்வில்லம் உன்னைக்
கையசைத்துக் கூப்பிடும்.
இந்தக் குழந்தைக் குட்டிகளோ
தத்தமது சொந்த உலகினுக்குள் தம்மைத் தொலைப்பர்.
நீ அடிக்கொருதரம் கொண்டாடுவாய்
இந்தத் தனிமையின் கானிவேல் கொண்டாட்டங்களை.
காரணங்களற்று வெறுமனே இவ்வறைகளிலிருந்து
வாசற்புறங்களுக்கு நடந்தலைகையில்
நீ நிச்சயமாய்க் காண்பாய்
இவ்வெல்லாக் காலத்திலும்
எத்தனைத் தனிமைத் துயருடன் நான் இங்கே
உயிர் சுமந்து கிடந்திருப்பேன் என்பதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேபாள மொழியில்:- Sudha M.Rai
ஆங்கிலத்தில்:- Subhas Deepak

## ஒரு பழைய புகைப்படம்
## An Old Photograph

மேசையின் மீது வைக்கப்பட்டிருந்தது ஒரு பழைய புகைப்படம்.
அது தொங்குகிறது சிலவேளை கடந்தகாலம் போல
சிலவேளைகளில் ஒரு துயரத்தைப்போல.
காலத்தினது சக்கரம் உருண்டோடியபடியிருக்கிறது.
என் காலடித்தடங்களும் முன்னோக்கி நகர்ந்த வண்ணமுள்ளது.
தற்போதைய காலத்துக்கும் அந்தப் புகைப்படத்துக்குமிடையே
ஒரு முரண்பாடு எட்டிப்பார்க்கிறது.
“ஓ! நீ அப்போது இத்தனை அழகாய்
கொழுகொழுவென்றிருந்தாயா?“
நீ இந்தளவு மகிழ்ச்சி ததும்ப வாழ்ந்திருந்தாயா அப்போது?
நெருங்கி மிக நெருங்கி புகைப்படத்தருகே வந்தே நான்
அதனை முறைத்துப்பார்க்கிறேன்.
என் முகம் கண்டு அஞ்சி அது அலறுகிறது.
அப்பாவி நான் ஏற்றுக் கொள் எனை.
இங்கே என் தவறென்று எதுவும் கிடையாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேபாள மொழியில்:- Bhishma Upreti
ஆங்கிலத்தில்:-Manu Manjil

## அடியாழத்தே...
Deep Down

நான் எரிந்து கொண்டேயிருக்கிறேன் அக்னியின்
உலைக்களத்திலன்று,
என் சொந்த இதயத்தினுள்ளேயே.

துப்பாக்கியில் வெளியான சன்னங்கள் பிறழ்ந்து
ஆழ்துயிலிலாழ்ந்து கனவிழைக்கும் கன்னியரின்
தலையைத் தொட்டுத் துளைத்துப் போகவாரம்பிக்கையில்,
அவலட்சணமான பேரச்சம் பள்ளி செல்லும் சிறுவனைத்
துரத்தி விரட்ட ஆரம்பிக்கையில்,
விசுவாசங்களை கொன்றழித்து பேரிரைச்சலுடன் மரணங்கள்
வெடித்திடுகையில்
எல்லாப் புறத்திருந்தும் மூடிடும் பனிபோல விரிவடைந்து
நான் எரிய ஆரம்பித்தேன் கன்னங்கரு பீதியில்.

கனவேதுமின்றி பரவசங்களும் ஏதுமின்றி
நான் வளர்ந்து ஆளாகிய குன்றுகளோ
காய்ந்து வரண்டு துரும்பாகி இளைத்து வெடித்துச் சிதற
ஆயத்தமாகி இருக்கின்றன
ஆதலினால் ஒரு இருளடர் வருங்காலத்துக்கான முன்னறிவிப்பு
என்னோடு எரிந்த வண்ணம் அடியாழத்தே ஆழமாய்.

நான் விட்டு விடுதலையாகிட
அபார ஆசை கொள்கிறேன்
ஜீவிதத்தினது இராகத்தையே
கொல்லுகின்ற எல்லாவகை எரிதல்களிலிருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை இன்னும் ஓயவில்லை.
என்ன விலையாயிருந்தாலென்ன
வாழ்வினது ஜீவன் அழகேயாம்.
வாழ்க்கை அதன் சொந்த நறுமணத்தையே
குடித்தழிக்கக் கூடாது.
நான் இவைபற்றி சிந்தித்துப் பார்க்கிறேன்
ஆழத்தே அடியாழத்தே.
என்னைப் பச்சையாய் எரிக்க ஆரம்பிக்கும் ஆன்மாவோடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரபிர் தும்பப்பு
Chandrabir Thumpapo

## நிழலும் சுயநலமும்
Shadow and Selfishness

ஒளி எப்போதும் பின்தொடரும் இருட்டை.
தடைகள் அனைத்தையும் விட்டு நீங்கி
பாதைகள் வகுத்து
ஒளி அங்கு பிரசன்னமாகும் கணத்தே
ஐயோ மறுபடி அவ்விரு அயோக்கியர்களும்!
நிழலும் சுயநலமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிந்தியில்:- Mamta Kiran
ஆங்கிலத்தில்:- Dinesh Misra

## ஆங்கொரு பசுமரம் இருந்தது
There was a green tree

ஆங்கே ஒரு பசிய நிறத்து மரம் இருந்தது.
அதன் கரங்கள் நீட்சிபெற்று வளர்ந்திருந்தது.
நீளமாய் வளர்ந்திருந்த அதன் கரங்களிலே
மிருதுவாய் மென்பட்டாய்
அழகொளிரும் சின்னப்பூக்கள் பூத்திருந்தன.
ஆங்கு அதன் கூட்டில்
பஞ்சுபோலும் மென்மையாய்
அழகழகாய் குஞ்சுகள் சிலவும்
கூடுகட்டி வாழ்ந்திருந்தன.
சின்னஞ்சிறுசுகள் அதன் மடிமீதில்
குதூகலமாய்க் களித்திருந்தன.
நிழலில் ஆறுதல் பெற
ஆங்கே சில வழிப்போக்கர்களும் வந்திருந்தனர்.
அதனடியே ஆண்கடவுளரையும்
பெண்கடவுளரையும் வைத்துப்போயினர் மக்கள்.
அது தன் துணைவருக்காய்ப் பிரார்த்திக்க வரும்
குலப் பெண்டிர்களை ஆசீர்வதிக்கவும் செய்தது.
எத்தனையெத்தனையோ நற்கருமங்களாற்றிற்று
அனைவருக்கும் அப்பசுமரம்.

ஆயினும் சிலபோது மரமது மெல்லச் சொல்லும்.
குஞ்சுகள் சிறகு முளைத்ததும் பறந்து போகும்.
வளர்ந்ததும் பிள்ளைகள்
புதுப்புதுப் பாதைகள் காண
புறக்கணிப்பர் இவ்வழியை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்போக்கர் களைப்பு நீங்கி
தம் பயணத்தைத் தொடர்வர்.
மனைவிமார் ஆசீர்வாதங்கள் பெற்று மீள்வர்.
கோடியாய்க் குவியும் காரியச் சுமைகளில்
யாரும் என்னை எண்ணியும் பாரார்.

வயோதிபம் அடைந்துவிட்டேன் நான்
பலவீனமாயும் ஆகிவிட்டேன்.
எப்போதென் கிழ நரம்புகள் ஒடிந்து வீழும்
என்றெனக்குத் தெரியாது.

உங்கள் அனைவரையும்
பெருத்த குரலில் அழைப்பேன் நான்.
முன்னம் போலொருமுறை
கூடுங்கள் என் முற்றத் திடலில்.
நும்மனைவரையும் ஒருதடவை
ஆழமாய்க் கூர்மையாய் பார்க்க வேண்டும்.

... நூலகம்
... பிரதேசசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

William Blake (1757-1827) - பிரித்தானியா

நவீனத்துவத்துக்கும், மத ரீதியிலான கட்டுப்பாடுகளுக்கும் எதிராய்க் கிளர்ந்து நின்ற ஒரு புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவர். மதத்தினது பெயரால் மனிதம் அழிவதைக் காணச் சகியாதவர். இலண்டனின் தென்பகுதியில் வசித்தார். கைத்தொழிற் புரட்சியின் விளைவால் ஏற்பட்ட பின்னடைவுகள் அனைத்தையும் பலமாகச் சாடினார். சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், சமூக அநீதிகள், மதத்தினது தேவையற்ற கட்டுப்பாடுகள் அனைத்தையும் சாடிநின்ற கவிதைகளை அவர் படைத்தமையால் "இருபதாம் நூற்றாண்டின் சிந்தனைகளுடன் வாழ்ந்த பதினெட்டாம் நூற்றாண்டுக் கவிஞன்" எனப் போற்றப்படுகிறார்.

John Keats (1795-1821) - பிரித்தானியா

ஜோன் கீட்ஸ் 1795, ஒக்டோபர் 31 இல் இலண்டனில் பிறந்த அற்புதமான கவிஞர். பெற்றோருக்குப் பிறந்து உயிர் வாழ்ந்த நான்கு பிள்ளைகளில் இவர் மூத்தவர். அவருக்கு எட்டுவயதாகும் போது, குதிரையிலிருந்து வீழ்ந்து தந்தை இறந்துவிட, தாய் மறுமணம் செய்து கொண்டாராயினும் அத்திருமணம் நிலைக்கவில்லை. பாட்டியின் இல்லத்தில் வாழ வேண்டியதாயிற்று இவர்களுக்கு. தாயும், கீட்ஸுக்கு பதினான்கு வயதாகையில் கசநோய் கண்டு இறக்க, துயரத்தில் ஆழ்ந்தது குடும்பம். மருத்துவம் கற்றார் கீட்ஸ். எனினும் கவிதைத்துறை அவரைக் கவர்ந்தது. பைரனின் கவிதைகளின்பால் ஈர்க்கப்பட்டார். 1818 களில் ஸ்கொட்லாந்து, அயர்லாந்து போன்ற இடங்களுக்குப் பயணப்பட்டார் கீட்ஸ். வறுமை, மற்றும் நோய் கண்டு கீட்ஸின் சகோதரர்கள் இருவர் இறந்தனர். குடும்ப நோயாய் கசநோய் கீட்ஸையும் பீடித்துக் கொண்டது. பாட்டன் போன்று பலரும் நோய்கண்டு இறந்தார்கள். இறுதியில், டொம் கீட்ஸ் என்ற அவர் மிக அன்பு வைத்திருந்த தம்பியும் இறக்கவே பெரிதும் வாடிநின்றார் அவர். ப்ரவ்னியுடன் காதல் கொண்டார் கீட்ஸ். அவர் காதலை ப்ரவ்னி புறக்கணித்தார். அவர் அவளுக்கு எழுதிய இலக்கியம் மிகைத்த கடிதங்கள் வாசகர்களை எல்லைகளின்றிக் கவர்ந்தன. நோய்க்கு உசிதமான காலநிலை என மருத்துவர்கள் ரோம் பற்றிச் சொல்ல, அங்கு போனார் அவர். ப்ரவ்னியுடன் தொடர்பு அறுந்து போயிற்று. 1821இல் ரோமில் அவர் மரணித்தார். இயற்கையை ஆராதித்த கவிஞர்கள் வரிசையில் இவரது கற்பனை களுக்கும், உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் கவிதைகள் அவர் இறப்பின் பின்னால் அதிகம் பேசப்பட்டன.

W.H. Davies (1871-1940) - பிரித்தானியா

வேல்ஸ் கவியும் எழுத்தாளருமாவார். ஐக்கிய ராச்சியம், அமெரிக்காவில் மாறி மாறி வாழ்ந்தார். இயற்கையின் அற்புதங்கள், வாழ்வின் கடினங்கள், மக்களது வாழ்வு என்பன பற்றியே அதிகம் பாடினார். இவரது மூன்றாம் வயதில் தந்தை இறக்க தாய் மறுமணம் செய்து கொண்டார். "மரணம்" என்கிற அவரது முதல் கவிதை அவரது 34ம் வயதில் எழுதப்பட்டது. 'The Soul's Destroyer' 1905 இல் வெளியான அவரது முதல் கவிதை நூலாகும். இரண்டு நாவல்கள் எழுதியிருக்கிறார். அமெரிக்காவுக்கு முதல் தடவை பயணித்து பின் கனடா தொடரூந்து ஒன்றிலிருந்து குதித்ததில் ஒரு பாதத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழக்க வேண்டியதாயிற்று. லண்டன் தெருக்களில் பொருட்கள் விற்பவனாக அலைந்தார் வெகு காலம். ஏழ்மை வாழ்வு. எம்மா என்பவரை மணந்தார். "காசிருக்கும் வரை சந்தோஷமில்லை. ஏழையாகும் வரை சந்தோஷத்தை அறியவில்லை. காசிருக்கும் வரை போலியான நண்பர்க்கூட்டம், காசில்லையாயின் உண்மையாய் இருக்கிற சொற்ப நண்பர்." என்ற அவரது கவிதை அடிகள் புகழ்பெற்றவை ஆகும்.

## D.H. Lawrance (1885-1930)– பிரித்தானியா

டேவிட் ஹேர்பர்ட் லோரன்ஸ் என்ற முழுப்பெயருடைய D.H. Lawrance இருபதாம் நூற்றாண்டின் அற்புதமான நாவலாசிரியரும், கவிஞருமாவார். 1885 இல் ஒரு ஏழைக் குடும்பத்திற் பிறந்தவர். 1930 இல் இறந்தார். தந்தை ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் பணியாற்ற, தாயார் ஆசிரியப்பணிபுரிந்தார். தன் தாயாரை மிக நேஸித்தார் லோரன்ஸ். பின்னாட்களில் தன் அம்மாவை மொடலாகக் கொண்டு தான் புரிந்த ஆசிரியத் தொழிலை, தன் எழுத்துகளுக்காக இடையில் கைவிட்டார். அவரது நன்கறியப்பட்ட நாவல்கள் பல. 'Sons and Lovers'(1913), 'The Rainbow'(1915), 'Woman in Love'(1921), 'Lady Chatterley's Lover'(1928) போன்றவை அவற்றில் சில. வகுப்புவாதம், நகரமயமாக்கல், நவீன வாழ்க்கை முறைமைகள் என்பவற்றைச் சாடி நின்றவை அவரது எழுத்துக்கள். அழகிய கவிதைகள் பல எழுதியிருக்கிறார். விலங்குகளைப்பற்றி அவர் எழுதிய கவிதைகள் மிக ரசிக்கத்தக்கவை. அவற்றின் மீது அவர் காட்டிய கரிசனையை அவை இயம்பி நிற்கின்றன.

## Siegfried Sassoon (1886- 1967) – பிரித்தானியா

Siegfried Sassoon 1886, செப்டம்பர் எட்டாம் திகதி ஐக்கிய ராச்சியத்தில் பிறந்து 1967, செப்டம்பர் முதலாம் திகதி வரை ஜீவித்திருந்த ஒரு கவிஞரும் படைவீரரும் ஆவார். தந்தை ஒரு யூதர். தாய் ஒரு கத்தோலிக்கர். முதலாம் உலக மகா யுத்தகாலத்தின் போது, முதன்மை கவிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். அவருடைய பல கவிதைகள் தேசப்பற்றைப் பாடுபொருளாகக் கொண்டிருந்தன. இவருடைய 'A Soldier's Declaration' 1917 ல் எழுதப்பட்டது. தன் மேலதிகாரிக்கு அவர் தன் தொழிலை விடுவதற்காக எழுதிய அற்புதமான விளக்கம் சொல்லும் கடிதமாய் அது அமையும். படைவீரர்களின் களைப்பையும், அலுப்பையும் காயங்களின் துயரோடு கலந்து அவரது எழுத்து முன்மொழிந்தது. இவர் 1917 இல், யுத்த முனையில் குண்டுகளின் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டு எடின்பர்க் மனநல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, Wilfred Owen என்ற படைவீரருடன் நட்புடன் பயணிக்கும் சந்தர்ப்பமொன்று கிடைத் திருக்கிறது. இந்த நட்பின் வாயிலாக இலக்கியத்தில் பெரிய தாக்கத்தை உணர முடிந்தது. இருவருமே யுத்தங்கள் பற்றி அதிகம் பாடினார்கள். இதன் விளைவாக அவர்களுடைய எழுத்தாக்கத்திற்கு மிகப்பெரும் வரவேற்பு கிடைத்தது. இவருடைய Trilogy எனும் சுயசரிதையானது மூன்று பாகங்களைக் கொண்ட தொகுதியாவும், மிகப் பிரசித்தி பெற்றதாகவும் விளங்குகிறது. போலவே, அவரது Sherston நாவல் அதிகம் பேசப்பட்டது. சசூனின் பார்வையில் போர் என்பது கொடூரத்தன்மை வாய்ந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துள்ளது. இவர் போர் தொடர்பாகப் பேசும் கவனத்துக்குரிய முக்கிய எழுத்தாளுமையாகவும் விளங்கியுள்ளார்.

Edna St.Vincent Millay (1892-1950) - America

எட்னா செனட். வின்சன்ட் மில்லாய் ஒரு அமெரிக்கக் கவிஞை. கவிதைக்கான புலிட்சர் விருதை வென்ற முதல் பெண்மணி. வளரும் பருவத்தே வறுமை படுபயங்கரமாய்த் துரத்திற்று. குடிப்பழக்கத்தால் சீரழிந்த ஒரு பள்ளிக்கூட ஆசிரியரான தந்தையை தாயார் விவாகரத்து செய்து கொண்டமையால் மூன்று பெண்பிள்ளைகளை வைத்துக் கொண்டு உயிர்வாழ பெரும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது எட்னாவின் தாயார். வறுமை எட்னாவின் வாழ்வில் தவிர்க்க முடியாத விடயமாகவேயிருந்தது. உறவினர், நண்பர்களிடத்தில் உதவிகேட்டு அலைய வேண்டியிருந்தது. எனினும் எட்னாவின் தாயார் செல்லுமிடத்துக்கெல்லாம் கவிதைகளையும் எப்போதுமே சுமந்தார். அவர் தன் மூன்று பிள்ளைகளுக்கும் ஷேக்ஸ்பியரையும், மில்டனையும், இதர ஆங்கிலக் கவிஞர்களையும் பற்றி சொல்லிக் கொடுத்துக் கொண்டேயிருந்தார். வறுமையோடும், இலக்கியத்தைச் சுவைத்தார் எட்னா எப்போதும்.

Paul Eluard- Eugene Grindel (1895-1952) - Spain

பப்லோ பிக்காஸோ (1881-1973) நவீன ஓவியர்களில் மிக முக்கியமானவர். நவீன ஓவியத்துறைக்கு அவர் ஆற்றியிருக்கும் பங்களிப்பு மிக முக்கியமானது. நவீன ஓவியத்துறையின் ஒரு உத்தியான கியூபிஸம் என்கிற போக்கின் முன்னோடிகளுள் ஒருவரும் கூட. அவரது ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை. அவற்றுள் Guernica- குவெர்னிகா ஓவியமும் ஒன்று. குவெர்னிகா என்பது வட ஸ்பெயினிலுள்ள பாஸ்க் இனத்தவரது வரலாற்றுச் சிறப்புமிக்கத் தலைநகரம் ஆகும். இந்நகரத்தின்மீது 1937 இல் ஸ்பெயினில் ஒரு உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருந்தவேளை, தளபதி பிராங்கோ விற்கு உதவியாக வந்த நாஸி குண்டு வீச்சு விமானங்கள் 1937-04-26 இல் குண்டு மழை பொழிந்ததில் அந்நகரமே முற்றாக அழிந்தது. ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டார்கள். இதுவே உலக வரலாற்றில் நடத்தப்பட்ட முதலாவது சர்வாதிகாரக் குண்டு வீச்சாகக் கருதப்படுகிறது. அவ்வழிவு தந்த தாக்கத்தை கருவாகக் கொண்டதே பிக்காஸோவின் குவெர்னிகா ஓவியமாகும். “குவர்னிகா வின் அழிவு கண்டு பிக்காஸோ வின் தார்மீக உணர்வு ஆர்த்தெழுந்தது. அவரிடம் குமுறியெழுந்த ஆத்திர உணர்வு அழகியலுக்கும் அப்பால் நின்று குவெர்னிகாவைத் தீட்டத் தூண்டியது” என்கிறார் அது பற்றி கருத்துத் தெரிவித்த பிக்காஸோவின் நெருங்கிய நண்பரும், பிக்காஸோ பற்றி பல நூல்களை எழுதியவருமான ஸ்பெய்ன் அறிஞர் ஜோசப் பலாவ் இஃபேபர். இவ்வாறான அவதானத்தைப் பெற்ற குவர்னிகா ஓவியத்தைப் பற்றிய பல ஆவணப் படங்கள் வெளியாகியுள்ளன. ரொபர்ட் ஹெசென்ஸ், எலைன் ரெஸ்னெய்ஸ் ஆகியோரது இணை இயக்கத்தில் உருவான அவ்வாறானதொரு ஆவணப்படத்தில் பின்னணியில் ஒலிக்கும் குவெர்னிகா என்கிற கவிதையை Paul Eluard போல் எல்யூவார்ட் எனும் புனைபெயர் கொண்ட யூஜீன் கிரின்டல் எனும் கவிஞர் யாத்திருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jacques Prevert – (1900-1977) – பிரான்ஸ்

Jacques Prevert என்பது அவரது முழுப்பெயராகும். பிரான்ஸ் கவிஞரான இவர் திரைக்கதைஞராகவும் இருந்திருக்கிறார். 'Les Enfants DuParadis' என்பது அவரது புகழ்பெற்ற திரைப்படம் ஆகும். Neuilly-Sur-Seine இல் பிறந்து பாரிஸில் வளர்ந்தார். இராணுவ சேவையில் 1918 இல் இணைந்து பணிபுரிந்திருக்கிறார். 'The King and The Mocking Bird' என்ற திரைப்படத்தை Paul Grimault என்ற தன் உயிர் நண்பரோடு இணைந்து தயாரித்தார். எனினும், படம் வெளியானபோது அவர் உயிருடனில்லை. படத்தை அவரது ஞாபகமாக அர்ப்பணம் செய்து, முதல்நாள் தன் பக்க ஆசனத்தை வெறுமையாக வைத்திருந்து அவர் மீதான அன்பை வெளிப்படுத்தினாராம் அந்த நண்பர். 'Words'(1946), 'Spectacle'(1951), 'Rain and Good Weather'(1955), 'Stories' (1963), 'Things and Others'(1973) அவரது புகழ்பெற்ற நூல்கள் ஆகும். பாரிஸில் வாழ்க்கை அனுபவங்கள், இரண்டாம் உலகப்போரின் பின்னான வாழ்வு போன்றவை அவரது அதிகமான ஆக்கங்களுக்கு கரு தந்தன. அதிகமான அவரது கவிதைகள் பாடல்களாகவும் இசைக்கப்பட்டுள்ளன.

Langston Hughes (1.2.1902-22.5.1967) – அமெரிக்கா

அமெரிக்கக் கவி. சமூக சேவையாளர். நாவலாசிரியர். நாடக ஆசிரியர். அமெரிக்காவில் ஜொப்லின், மிசூரியில் பிறந்தார். தாயார் ஒரு பள்ளி ஆசிரியை. அத்தாய்க்கு இவர் இரண்டாம் பிள்ளை. ஆபிரிக்க அமெரிக்கத் தந்தை தாயைக் கைவிட்டுப் போய்விட வறுமையிற் துவண்டது குடும்பம். கியூபா பின் மெக்ஸிகோ என அலைந்தார். அமெரிக்காவில் கறுப்பர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட முடிவுறா இனவாதம் துரத்தித் துரத்தி அடித்தது அவரை. அம்மா வேலை தேடி அலைந்தார். எனவே "கன்சாசில்" பாட்டியிடம் வளர்ந்தார். பாட்டியும் இறந்துவிட நண்பர்களிடம் ஒட்டிக் கொள்ள வேண்டியதாயிற்று. தாயிடம் மீண்டும் வந்தார். லிங்கன் இலக்கணப் பாடசாலையில் "வகுப்பறைக் கவி"யானார். நீக்ரோ என்பதால் நீக்ரோக்களை அதிகம் நேஸித்தார். மீளவும் தந்தையிடம் உயர்கல்வி கற்க வாய்ப்பளிப்பார் என நம்பி வந்தார். சிறிது காலம் தங்கியிருந்த பின் தந்தையை விட்டுப் பிரிந்தார்.

'Big Sea' (பெருங்கடல்) எனும் நூலில் அது பற்றி எழுதுகிறார். "நெடுங்காலம் துயர வாழ்வே வாழ்ந்தேன். பாட்டியுடன் இருந்தாலும் தனிமை பெருமளவு வாட்டியது. அப்போதுதான் புத்தகங்களை நான் நம்ப ஆரம்பித்தேன். புத்தகங்களில் இருந்த அற்புத உலகை நான் ரசித்தேன். "கன்சாசில்" நாம் அனுபவித்தது போல புத்தகங்கள் "மொனோசிலபிக்" ஆன அமைப்பில் வாழ்கிற நிலையை ஏற்படுத்தவில்லை." முதல் கவிதை The Negro Speaks of Rivers' மிக அற்புதமானது. 'Not Without Laughter' அவரது நாவல் 1930 இல் இலக்கியத்துக்கான ஹார்மன் தங்க விருதை வென்றது. உழைக்கும் வர்க்கத்தினராகிய கறுப்பர்கள் அமெரிக்காவில் வாழப் போராடிய விதம், அவர்களது சிரிப்பு, மகிழ்ச்சி, இசை எல்லாமும் அந்நாவலது கருவாக அமைந்தது. புற்றுநோய் கண்டு 65ம் வயதில் இறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### James Reeves (1909-1978) - பிரித்தானியா

ஜோன் மொரிஸ் றீவ்ஸ் (1.6.1909-1.5.1978) பிரித்தானியாவின் ஹெரோ பிரதேசத்தில் பிறந்த எழுத்தாளராவார். ஆரம்பக் கல்வியை Stowe School இலும் உயர்கல்வியை Cambridge Jesus College இலும் கற்றார். கவிதைக்கும், சிறுவர் இலக்கியத்துக்கும் பெரும் பங்காற்றியவர். பாரம்பரியப் புகழ் வாய்ந்த பாடல்களை தொகுத்தளித்தவர். சிறியோர், பெரியோர் இருபாலாருக்காகவும் கவிதைகள் மற்றும் சிறுகதைகள் நிறைய எழுதினார். ஒலிபரப்பாளரும் கூட. சிறந்த விமர்சகராகவும் இருந்திருக்கிறார். தந்தை அல்பர்ட் றீவ்ஸ் ஒரு கணக்காளராவார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் ஜோன். பின்னாளில் அதை ஜேம்ஸ் என மாற்றிக் கொண்டார். 'The Secret Shoemakers' அவரது புகழ்பெற்ற சிறுகதை நூலாகும். 'The Wandering Moon' சிறுவர்க்கான அவரது கவிதை நூலாகும்.

### Dylan Marlais Thomas (1914 -1953)- பிரித்தானியா

Dylan Marlais Thomas 27 ஒக்டோபர், 1914 இல் Walesஇல் பிறந்தவர். பதினாறு வயதிலேயே பள்ளிக்கூடப் படிப்பைக் கைவிட்டவர். பத்திரிகையாளரானார். அவரது 'Light Breaks Where No Sunshines' 1934இல் வெளியானது. அது இலக்கிய உலகின் கவனத்தை ஈர்த்தது. 1937இல் கெய்ட்லின் மெக்னாமாரா என்பாரை மணந்து இங்கிலாந்தில் வாழ்ந்தார். BBC இல் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றினார். 1945 முதல் 1949 வரை ஒலிபரப்புத்துறையில் தொண்டாற்றினார். 1950 இல் அமெரிக்கா பயணமானார். அதீத குடிப்பழக்கம் கோமா நிலைக்கு அவரை இட்டுச் சென்று 1953இல் அவரது 39ம் வயதிலேயே இறப்பெய்தச் செய்தது. இவர் நவீன சிந்தனைகள் கொண்ட இருபதாம் நூற்றாண்டின் புகழ்மிக்க வேல்ஸ் கவிஞனெனப் போற்றப்படவும் செய்கிறார். புகழ்பெற்ற கவிஞர் Bob Dylan இவர் மீது கொண்ட காதலினாலேயே தனது பெயரோடு அவர் பெயரைக் கூடச் சேர்த்துக் கொண்டாராம். பேனை ஆயுதங்களைவிட வல்லமை மிக்கது எனச் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆயுதங்கள் ஆபத்து மிக்கவைதான். எனினும், அரச நிறுவனங்களில் உள்ளோரும், வைத்தியர்களும், சட்டத்தரணிகளும், அரசியல்வாதிகளும் தொட்டிலிலிருந்து புதைகுழிக்கு நமை இட்டுச் செல்லுகிற ஆயுதங்களுக்கான கொள்வனவு ஒப்பந்தங்களிலே கையொப்பம் இடவே செய்கின்றனர். பெரும்பாலார் சமூகத்தினது நலன் கருதி அப்படிச் செய்தாலுமே, அவை எப்படியோ இறுதியாக அழிவையே விதைத்துச் செல்கின்றன. அப்படிக் கையொப்பமிடும் கரங்கள் பற்றியே டிலான் தோமஸ் பேசுகிறார் இக்கவிதையிலே.

### Silva Kaputikyan 1919- சோவியத் ரஷ்யா

Silva Kaputikyan 1919இல் பிறந்தவர். ஆர்மேனியக் கவிஞை. 1947களில் சோவியத் கவிதைகளில் சூரியனால் தங்கமுலாம் பூசப்பட்டதே போலும் சூடாய், ஆழமாய் ஒலித்த பெண்குரல். வித்தியாசமான அம்மண்ணிலே வித்தியாசமானதொரு கவிதைக் காலநிலையைத் தோற்றுவித்தவை அவரது கவிதைகள். ஆர்மேனிய மொழியில் இவர் எழுதிய கவிதைகளே முதல் தடவையாக ரஷ்யமொழியில் மொழிமாற்றம் கண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசாட்சியினை நுண்மையான முறையில் புரிந்து கொண்டதே இவரது கவிதைகளின் முதல் தகுதி என்கின்றனர் ஆய்வாளர்கள். தாயினதன்பு தன் குழந்தை அல்லலுறும் போதுகளில் வேறெப்போதையும்விட உறுதியாய் மிகைத்துக் கிடக்கும். போலவே, ஆர்மேனியா என்கிற தன் தாய் அனுபவித்த கடந்தகாலத் துயரங்கள் சில்வாவின் மிகைத்த அன்புக்குக் காரணமானது. தன் தேசத்துக்கான அவரது நேஸம் அவர் கவிதைகளில் அதிகம் இடம்பிடித்துக் கொண்டது. ஆர்மேனிய மண்ணை அவர் நேஸித்த விதத்தை "எமது கற்களினது பாடல்" 'Songs of our stones' துதிப்பாடல் நன்கு இயம்பும்.

## Wen Xin- சீனா

1934இல் சீனாவின் ஜின்யுன், ஸேஜியாங் பிரதேசத்தே பிறந்தவர். நானூற்றுக்குமதிக மான கவிதைகளை எழுதியிருக்கிறார். லேங்குவான் நாட்டு இலக்கியப் பெடரேஷனின் தலைவராகவும் இருந்திருக்கிறார். 1988இல் Weng Meng அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "சீன இலக்கியம்" நூலில் பெறப்பட்டது இக்கவிதை.

## Rabindranath Tagore (1861-1941)- இந்தியா

குருதேவர் ரவீந்திரநாத் தாகூர் மூத்த இந்திய இலக்கியவாதியும், இந்தியாவின் மாபெரும் புதல்வர்களுள் ஒருவருமாவார். ஒரு நாடக ஆசிரியராக, கவிஞராக, பாடலாசியராக, புதின ஆசிரியராக, கல்வியாளராக, தத்துவஞானியாக சர்வதேச அளவில் ஒளி வீசிய பன்முகத்தன்மை கொண்டது அவரது தனித்துவமான நுழைபுலம். இந்திய சிந்தனையின் வளத்தையும், பண்பட்ட தன்மையையும் உலகறியச் செய்த மகாகவி. ஆழ்ந்த அமைதியான குரலில் மானுட விடுதலையைப் பாடினார். தன் இருபதாம் வயதில் "வால்மீகி பிரதிபா" எனும் இசை நாடகத்தை எழுதினார். 'The Ideal one', 'The Golden Boat', 'Gitanjali', 'Wreath of Songs', 'The Flight of Cranes', போன்றவை அவரது புகழ்வாய்ந்த கவிதைத் தொகுப்புகளாகும். தொடர்ந்து இரண்டாயிரத்துக்கும் அதிகமான பாடல்களை எழுதி, வங்க இசையில் ஒரு பாணியாக, அவரது பெயர் சூட்டப்பட்ட "ரவீந்திர சங்கீதத்தை" படைத்தார். அவர்தன் சொந்தக் கவிகளின் தொகுப் பாகிய "கீதாஞ்சலி"யை வங்க மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்து, 1913ல் நோபல் பரிசை வென்றதன் மூலம் அப்பரிசை வென்ற முதல் ஆசியராக பெருமை பெற்றார். அவரது சிறுகதைகள், நாவல்கள் வங்க மொழியில் பெரும் இடத்தைப் பெற்ற பெருமைக்குரியன. மட்டுமன்றி, பங்காளதேஷ் நாட்டின் "அமர் ஷோனார் பாங்களா", இந்தியாவின் "ஜனகன மன"என இரண்டு நாடுகளின் தேசீயகீதங்களை எழுதிய ஒரே கவிஞரும் கூட. தன் அறுபதாம் வயதில் ஓவியம் பக்கமாகத் தன் கவனத்தைத் திசைதிருப்பி அதிலும் முத்திரையைப் பதித்தவர். "சாந்தினி கேதனில்" "விஸ்வபாரதி" பல்கலைக்கழகத்தை நிறுவி, ஒரு கல்விய லாளராக தன்னை உலகுக்கு இனம் காட்டியவரும் கூட. பல்லாண்டுகள் தொடர்ந்து எழுதிக் குவித்த பொங்கும் சிந்தனை அவர் வசப்பட்டு நின்றது. இது அவரது இயற்கையின் மீதான தீவிர மகிழ்ச்சியை வெளிப்படுத்தி நிற்கும் ஒரு கவிதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Moniza Alvi- பாகிஸ்தான்

1954 இல் ஒரு பாகிஸ்தானிய தந்தைக்கும், பிரித்தானியத் தாய்க்கும் பிறந்த மொனிஷா அல்வி பாகிஸ்தானிய - இங்கிலாந்து கவிஞையும் எழுத்தாளருமாவார். அவள் லாஹூரில் பிறந்து ஓரிரு மாதங்களிலேயே தந்தையோடு பிரித்தானியாவுக்குச் சென்று குடியேறி விடுகிறாள். மொனிஷாவின் முதல் கவிதை நூல் 'The Country at my Shoulder" வெளியான பின்னர்தான் அவளால் பாகிஸ்தானுக்கு மறுபடி விஜயம் செய்ய முடிந்தது. சிறிது காலம் கல்லூரி ஆசிரியையாய் பணிபுரிந்த பின் மறுபடி எழுத்துத் துறைக்கே செல்லும் மொனிஷா அல்வி, தன் கணவர் ரொபர்ட்டுடன் பிரித்தானியாவில் வாழ் கிறாள். மொனிஷாவுக்கு ஒரு மகள் உள்ளாள். இதுவரை அவளது நான்கு கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. ருட்ரியாட் கிப்ளிங்கின் எழுத்தால் கவரப்பட்டு அவள் ஒரு சிறுகதைத் தொகுதியும் வெளியிட்டிருக்கிறாள். Presents from my Aunts in Pakistan "பாகிஸ்தானிலிருக்கும் என் அத்தைமார்களின் அன்பளிப்புகள்" எனும் தலைப்பில் மொனிஷா எழுதிய முதல் கவிதை வெளியாகையில் கூட அவள் பாகிஸ்தானுக்குத் திரும்பியிருக்கவில்லையாம். "அந்தக் கவிதையில் வருகின்ற பதின்மூன்று வயதான சிறுமி சிலபோது நானாகவே இருக்கக் கூடும். பாகிஸ்தானியப் பின்னணியுடனான கவிதைகளை எழுதுவதூடாக என் சொந்த மண்ணோடு தொடர்பில் இருப்பதை நான் அவாவினேன்" என்கிறாள் மொனிஷா அல்வி.

## Nissim Ezekiel

நிசிம் எசகீல்- டிசம்பர் 16,1924 இல் இந்தியாவில் பிறந்தவர். யூதப் பெற்றோர். இங்கிலாந்திலே கல்வி கற்றார். ஆங்கிலத்தில் கவிதை, நாடகங்கள் எழுதினார். நடிகரும், கலை விமர்சகரும் கூட. பத்திரிகையாசிரியராகவும் இருந்தார். பின் காலனித்துவக்கால இந்திய இலக்கிய வரலாற்றில் முக்கியமான படைப்பாளி. 'Night of the Scorpion', 'The Professor', 'Soap', 'The Patriot', 'The hill', 'Poet, Lover, Birdwatcher', 'philosophy', 'Minority Poem', 'Jewish Wedding in Bombai', 'Island', 'Goodbye Party For Miss.Puspa.T.S' போன்றன அவரது பேசத்தக்க கவிதைகளாகும். "நல்ல கவிஞர்கள் சொற்களுக்காய்க் காத்திருப்பர்" என்ற நிசிம் எசகீலின் வார்த்தைகளுக்கொப்ப, அற்புத மான சொற்கையாளுகை அவருக்கு வாய்த்திருந்தது. கவிதை இலக்கியத்திற்காக 1983இல் சாகித்திய அகாடமி விருது வென்றவர்.

இந்தியாவின் கலாசாரப் பாரம்பரியம், மதநம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள் என்பவற்றில் ஒன்றிக்க முடியாதபடி அவரது ஆங்கிலக்கல்வி அவரைத் தடுத்தது. யூத வாழ்வு முறையிலும் அவரால் ஊடுருவ முடியவில்லை. தண்ணீருக்குள் இருந்து வெளியேற்றப்பட்ட மீனாய் அவர் அந்நியப்பட்டுக் கிடந்தார். 'Night of the Scorpion' "தேளினது இரவு" கவிதையிலும் அவரது அந்நியத்தன்மையை வாசகன் புரிந்து கொள்ள முடியுமாயிருக்கிறது. தன் தாய்க்கு தேள் கொட்டிய இரவொன்றில் கிராமத்தவர்கள் வெளிப்பட்ட விதம், தந்தை அதனைக் கையாண்ட விதம் என்பவற்றை ஒரு அந்நியனாய் வெளியே நின்று பார்க்கிறார் நிசிம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sitakant Mahapatra

1937இல் பிறந்த சீதாகாந்த் மஹாபாத்ரா ஒரு இந்தியக் கவிஞர். கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் மானிடவியல் சம்பந்தமாகக் கற்றவர். அவரது கற்கைநெறி இந்தியாவின் ஆதிவாசிகள், அவர்களது குலச் சம்பிரதாயங்கள் பற்றியெல்லாம் அறிய நிறைய உதவிற்று. அக்கோத்திரத்தார் பாடிய வாய்மொழிமூலக் கவிதைகள், பாட்டுகள் போன்றவற்றைத் தொகுத்தும், ஆய்வு செய்தும் எட்டு நூல்கள் வெளியிட்டிருக்கிறார். பல விருதுகளை வென்றவர். ஜனாதிபதி விருது, சாகித்திய அகாடமி விருது, ஒரிசா அகாடமி விருது, சோவியத் நாட்டின் நேரு விருது என்பன அவற்றுள் சிலவாகும். ஹவாய் பல்கலைக்கழகத்தில் சர்வதேச கவிஞர்கள் மண்டலத்திலும் அங்கம் வகிப்பவர்.

தன் தந்தையோடு பாட்டியின் மரணவீட்டுக்கு வருகின்ற ஒரு சிறுவனது குரலாக ஒலிக்கிறது இக்கவிதை. தொலைதூர ஊரிலிருந்து பாட்டி வாழ்ந்த ஒரு கஷ்டப்பிரதேசக் கிராமத்தை பல இன்னல்களுக்கு மத்தியில் மகன் வந்தடைகிறார் எனினும், பாட்டியின் முகத்தைப் பாராமலேயே மரணக்கிரியைகள் நடந்தேகியிருக்கிறபடியால், அப்புதல்வனது அழுகை கப்பிய மனநிலையைக் கண்ணெதிரே கொணர்ந்து இக்கவிதையானது வாசகர் மனதை பெரும் வதை செய்கிறது.

## Amrita Pritam(31.8.1919- 31.10.2005)

பஞ்சாபி இலக்கியத்தில் ஒலித்த முதல் பெண்குரல். கவிதை, கட்டுரை, நாட்டாரிலக்கியம், நாவல், சிறுகதையென பல துறைகளிலும் மிளிர்ந்த முன்னோடி. தன் பதினொராம் வயதில் தாயை இழந்தார். ஆசிரியராய்த் தொழில் பார்த்த தன் தந்தையோடு 1947வரை லாகூரில் வாழ்ந்து, இந்தியா, பாக்கிஸ்தான் பிரிந்தபோது அகதியாகி 1948 இல் புதுடில்லி வந்தார். எனினும், பாக்கிஸ்தானாலும் அதிகம் விரும்பப்படும் எழுத்தாளராகத் திகழ்ந்தார். தாயினது மரணம் வாட்டியது அம்ரிதாவை. இலக்கியத்தின்பால் ஈர்க்கப் பட்டு 1936இல் தன் முதல் நூலைப் படைத்தார். பதினாறு வயதில் பிரீதம் சிங்குடனான திருமணபந்தம் பல கசக்கும் அனுபவங்களைத் தந்ததில் 1960இல் விவாகரத்துச் செய்து கொண்டு தனியே வாழ்ந்தார். பெண்ணுக்கெதிரான வன்முறைகளை அதிகம் பேசின அவரது ஆக்கங்கள். இவரது எழுத்துக்கள் பல மொழிகளில் மொழி மாற்றமும் கண்டுள்ளன. 1956இல் சாகித்திய மண்டலப் பரிசு, 1982இல் இந்தியாவின் உயர் விருதுகளுள் ஒன்றான பாரதீய ஞானபீட விருது, 1969இல் பத்மவிபூஷன் பட்டம், 2004இல் சாகித்திய மண்டல வாழ்நாள் சாதனையாளர் விருது என்று பல இலக்கிய வெற்றிகள் கண்டவர் அம்ரிதா.

## கமலாதாஸ்

மாதவிக்குட்டியாய், சுரைய்யாவாய் அறியப்பட்டிருந்த கமலாதாஸ் பின்காலனித்துவ யுகத்தின் மிகப் பேசப்பட்ட பெண்ணீய எழுத்தாளர். 1934.03.31 இல் இந்தியாவின் கேரள மாநிலத்தில் மலபார் பிரதேசத்தில் பெரும் கவிஞை பாலாமணி அம்மாவுக்கு மகளாகப் பிறந்தவர். கல்கத்தா மற்றும் மலபார் பிரதேசங்களில் பால்யத்தின் குதூகலங்களை சுகித்திருந்த பதினைந்து வயதே நிரம்பியிருந்த கமலாதாஸுக்கு, அவரிலும் சுமார் இருபது வருஷங்கள் மூத்தவரான மாதவதாஸ் கணவராக ஆகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம் பம்பாய்க்கு நகர்ந்து இல்லறம் நடத்தியதில் மூன்று ஆண்மக்களுக்குத் தாயாகிறார் கமலாதாஸ். வங்கி ஒன்றில் உத்தியோகம் செய்துவந்த மாதவதாஸ், கமலாதாஸின் இலக்கிய ஆர்வத்துக்கெல்லாம் பெரிய தடைகள் விதிக்கவில்லையாயினும், ஒரு மனைவியாய் பிள்ளைவளர்ப்பு, சமையலறைச் செயற்பாடுகள், வீட்டுவேலைகள் பற்றி கரிசனை கொள்ள எதிர்பார்த்தார். மாதவிக்குட்டியாய் மலையாளமொழியில் நன்கு அறியப்பட்டிருந்தார். அதுவே அவரது தாய்மொழியாகும். கமலாதாஸாக ஆங்கிலத்தில் சுடர்விட்டன அவரது எழுத்துக்கள்.

பெண்கள் பற்றி அவரது எழுத்து அதிக கரிசனை காட்டிற்று. பெண்ணின் வலிகள், ஆசைகள், உணர்வுகள் போலவே, மாதவிடாய், பூப்படைதல், அன்பு, காமம், ஓரினச் சேர்க்கை, சிறுபராயத் திருமணம், துரோகங்கள், உடலியல் நெருக்குதல்கள், மனக்கசப்புகள் பற்றியெல்லாம் பேசிற்று அவரது கவிதைகள். பெண்பாலினத்தராய் இருப்பது பெண்ணே தீர்மானிப்பதா என்று கேள்வி எழுப்புகிறார் கமலாதாஸ்.

## Bina Agarwal

ஐக்கிய ராச்சிய மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சூழல் அபிவிருத்திக்கான பேராசிரியர். டெல்லி இந்திய பொருளியல் வளர்ச்சி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர். 'A Field of One's Own' பல விருதுகளை வென்ற இவரது பிரசித்தமான நூலாகும். இந்தியாவின் பொருளியலாளராக இந்தியாவின் அபிவிருத்தி, கிராமப்புற வாழ்க்கை நிலைகள், வறுமை நிலை, சமத்துவமின்மை, பெண்களது சொத்துரிமைகள் பற்றி அதிகம் கவனத்தைச் செலுத்தியவரும் கூட. டெல்லியிலும், கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திலும் கற்றவர். எட்டு நூல்கள் எழுதியிருக்கிறார். 2002 இல் அபிவிருத்திக் கற்கைக்காக பங்களிப்பு நல்கியமைக்கு மால்கம் ஆதிசேஷ்யா விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இவர், விவசாயப் பொருளாதாரத்தில் ஆற்றிய பங்களிப்புக் காக 2005இல் ரமேஷ் சந்ரா அகர்வால் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார். 2008 இல் இந்திய இலக்கியத்துக்கும், கல்விக்கும் இவராற்றிய தொண்டுக்காக பத்மஶ்ரீ பட்டம் வழங்கப்பட்டது. "மொன்சூன்" அவரது கவிதைத் தொகுப்பு. சிறு வயதில் ராஜஸ்தானி லுள்ள தன் பாட்டி வீட்டில் தங்கியிருக்கும் அற்புதமான நாட்களை அடிக்கடி நினைவு கூறுகிறார். அந்தக்காலங்களே பால் ரீதியிலான சமத்துவமின்மை, இன ரீதியிலான சமத்துவமின்மை பற்றி அறிகிற வாய்ப்பைத் தனக்குத் தந்ததாக கூறுகிறார் அகர்வால்.

## Dr.Ram Sharma

கலாநிதி. ராம் ஷர்மா இந்தியாவின் உத்திரப்பிரதேச துயவெய ஏநனறை கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். சமூகம், சுற்றாடல், மனிதநேயச் சிந்தனைகள் பற்றிய கரிசனைகள் கொண்ட இவரது ஆக்கங்கள் இந்தியாவிலும், வெளியிலும் அதிக கவனத்தை இன்று ஈர்த்துள்ளன. பத்திரிகையாளராகவும் பணிபுரிகிறார். 'Muse'(2002), Serene Moments(2008),A String of Words(2009), Poets for World's Peace(2010), Anthologies(2011), Lamp of Love (2015) என இவரது பல தொகுதிகள் வெளிவந்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜித் கோர், கே.சச்சிதானந்தன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு சார்க் எழுத்தாளர்களது இலக்கியக் காலாண்டு சஞ்சிகையாக டெல்லியிலிருந்து வெளிவரும் 'Beyond Borders' 6ம் இதழ்- 2010, தலித் இலக்கியத்துக்குச் சிறப்புக் கவனம் கொடுத்து வெளிவந்திருந்தது. மார்ஷல் ஹெம்ப்ராம் எழுதிய "ஈட்டியும் வில்லும் ஏந்திடுவோம் நாம்", சித்திலிங்கையா எழுதிய "பசுவின் பாடல்", "என் மக்கள்" ஆகிய இரு கவிதைகள், மற்றும் உமா கவாய் எழுதிய "கூடு" என்பன அத்தொகுப்பிலிருந்து பெறப்பட்ட நான்கு கவிதைகள் ஆகும்.

***

அஜித் கோர், தினேஷ் மிஷ்ரா ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு சார்க் பிராந்திய தேசங்களில் கலை, கவிதை, கருத்துக்கள் என்பனவற்றைப் பறிமாறிக் கொள்வதற்காக வெளியிடப்பட்டு வரும் 'Beyond Borders' ஐந்தாம் இதழ் கரம் கிட்டியது. "பயங்கரவாதம்" என்கிற கருப்பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அமைந்திருந்த ஆக்கங்கள் வியக்க வைக்கின்றன. குறித்த பிராந்தியத்தில் சமாதானத்தைக் கொணரும் ஒரு யாத்திரையாக இந்நூலைக் காண்கிறார் அஜித் கோர். அந்நூலில் கண்டெடுத்த பதினான்கு கவிதைகளில் தனிமை, கொடூரம், சிதைவு, ஆக்ரமிப்பு, அடக்கியாளுதல், அநீதி என எல்லா மனித சமூகத்தையும் பொதுவாக வாட்டும் நோய்கள் கருப்பொருள்களாய் அமைந்திருக்கின்றன.

"அந்தத் தட்டுகை","கண்கள்" என்பன குல்சார் எழுதிய கவிதைகளாகும். குல்சாரின் இயற்பெயர் சம்பூரன் சிங் கர்லா. 1934 இல் பிறந்தார். இந்தியாவின் புகழ்பெற்ற உருது ஹிந்திக் கவிஞரும், சிறுகதை எழுத்தாளருமான இவர் ஒரு பட இயக்குனரும் கூட. பஞ்சாபி மொழியிலும் நிறைய எழுதியிருக்கிறார். இவரது பெரும்பாலான அழகிய கவிதைகள் ஹிந்தி சினிமாப் பாடல்களாக பரிமளிக்கின்றன. சாகித்திய அகடமி விருதுகள் உட்பட ஏராளமான பல விருதுகளை வென்றிருக்கிறார். நாளாந்த வாழ்வின் தன்னைச் சுற்றிப் பின்னியிருந்த மென்மையான உணர்வுகள், மனித உறவுகள் பற்றி அவர் கவிதைகள் அதிகம் பேசின. **'Half A Rupee'** அவரது சிறுகதைத் தொகுப்பாகும்;. **'Neglected', 'Silence'** என்பன அவரது கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

"நீதி" பிஸ்னு என்.மொஹப்பத்ராவால் எழுதப்பட்டது. இவர் ஒரிய மொழியில் எழுதிய இந்தியக் கவி. ஒரிஸ்ஸா மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகங்களில் கற்றார். டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான பேராசிரியராவார். ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் பல்கலைக்கழகங்களுக்கு பகுதிநேர விரிவுரையாளராகச் சென்று வருகிறார். 'Interrogating Social capital' இந்திய அனுபவங்களைச் சொல்லும் அவரது நூலாகும். மூன்று கவிதை நூல்கள் வெளியிட்டுள்ளார். பப்லோ நெருடாவின் கவிதைகளை ஒரிய மொழியில் வார்த்தவர். 'A Fragile World' அவரது மொழிபெயர்ப்பு நூல் 2015இல் வெளியானது. 'Rain Incarnations' அவரது மழையைத் துதிக்கும் கவிதைகளின் தொகுப்பு 2016இல் வெளியானது.

"என் அம்மாவும் என் கவிதையும்" கலாநிதி சுர்ஜித் பதார் எழுதியதாகும். அறுபதுகளில் எழுதத் தொடங்கிய ஒரு பஞ்சாபிக் கவிஞராவார். பஞ்சாபிப் பல்கலைக்கழகத்தில் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமாணிக் கற்கைநெறியை மேற்கொண்டவர். குருநானக் தேவ் பல்கலைக்கழகத்தில் இலக்கியத்துக்கான கலாநிதிப்பட்டத்தைப் பெற்றார். இசை வல்லுனராக வரவேண்டுமென்ற கனவும் இருந்தது. பஞ்சாபி சாகித்திய அகடமியின் தலைவராகவும் இருந்திருக்கிறார். பஞ்சாபிப் படங்கள் சிலவற்றுக்கு கதைவசனமும் எழுதியிருக்கிறார். 1993இல் சாகித்திய மண்டலப்பரிசு, 2012இல் பத்மஸ்ரீ விருது உட்பட பல விருதுகளை வென்றவர். 'Words Written In The Air', 'Thus Spake The Tree', 'Words Smoulding in The Dark', 'Shrine of Words', 'Music Lands', 'Anklet Of Autumn' போன்றவை இவரது சில நூல்களாகும்.

"ஒருநாள்....." கவிதை புகழ்பெற்ற இந்திக் கவிஞர் லீலாதார் மண்ட்லோய் எழுதியதாகும். இலக்கிய விமர்சனங்கள் அடங்கிய நூல்கள் மற்றும் கவிதைத் தொகுதிகள் பலவும் வெளியிட்டுள்ளார். ஓல் இந்திய வானொலி, இந்திய தூரதர்ஷன் என்பவற்றின் பணிப்பாளர் நாயகமாக தொழில்புரிந்து வரும் இவர், இவை தவிர அந்தமான், நிகோபார் தீவுகளின் நாடோடிக் கதைகளுக்கு புத்துயிர்ப்பு தருபவராகவும் திகழ்கிறார்.


"பூக்களின் கனவுகள்" புஷ்பா ஆர். ஆச்ர்யாவின் கவிதையாகும். Pushpa R. Achrya கல்வியியலாளராக, கவிஞராக, மொழிபெயர்ப்பாளராக, பத்திரிகையாளராக பன்முக ஆளுமைகளை உடையவர். காத்மண்டு திரிபுவன் பல்கலைக்கழகத்தில் தத்துவ முதுகலைமாணிப்பட்டம் பெற்று அங்கேயே பேராசிரியராகவும் பணியாற்றுகிறார். நேபாள மொழியில் கவிதை நூல்கள் பல படைத்தவர். கலீல் ஜிப்ரானின் 'The Prophet' ஐ நேபாள மொழியில் வார்த்தவர். இன்று கிராமங்களை கவிதைகளின் பால் விழிப்பூட்டும் பணியிலும் தீவிரமாகச் செயற்படுகிறார்.

லுத்பா சலிமா பேகம் எழுதிய "ஒரு கவிதை", H.K.கவுல் எழுதிய "அந்தக் கற்கோயில்கள்" சுமன் போக்ரால் எழுதிய "தினமும் காலையில்" தரன்னும் ரியாஸ் எழுதிய "அறை களிலிருந்து வாசற்புறங்களுக்கு" போன்ற கவிதைகளோடு,"ஒரு பழைய புகைப்படம்" - சுதா ராய், "அடியாழத்தே.." -பிஸ்மா, "நிழலும் சுயநலமும்" - சந்ராபிர், "ஆங்கொரு பசுமரம் இருந்தது" - மம்தா கிரான் கவிதைகளும் இங்கே சேர்க்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த "பூக்களின் கனவுகள்" அவரது மூன்றாவது மொழிபெயர்ப்புக் கவிதைத்தொகுதியாகும். சுமார் 43 கவிதைகளை உள்ளடக்கி யுள்ளது இத்தொகுப்பு. உலக அளவில் நன்கு அறியப்பட்ட ரவீந்திர நாத் தாகூர், வில்லியம் பிளேக், டி.எச். லோரன்ஸ், டைலான் தோமஸ், லங்ஸ்ரன் ஹியுஸ், அம்ரிதா பிரீதம் முதலியோரின் கவிதைகளுடன் தற்கால இந்திய, சீன, நேபாளக் கவிஞர்கள் பலரின் கவிதைகளும் இத்தொகுப்பில் உள்ளன. பல்வேறு நிலைப்பாடுகள் கொண்ட கவிஞர்களின் வெவ்வேறு வகையான கவிதைகளின் கதம்பமாக இத்தொகுப்பு அமைந்திருக்கிறது. அவ்வகையில் கவிதைச்சுவைஞர்களுக்கு இத்தொகுப்பு ஒரு விருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கலாம். சில கவிதைகள் ஆங்கிலத்திலிருந்து நேரடியாகத் தமிழாக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பிறமொழிக் கவிதைகள் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழாக்கப் பட்டுள்ளன. கவிதை மொழிபெயர்ப்பு மிகச் சிரமமான முயற்சி என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு ஸுலைஹா அதில் பெருமளவு வெற்றி கண்டுள்ளார் என்றே கூற வேண்டும்.

– பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்

ISBN 978-955-0958-64-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org